Registered No. M. 2830 "SIDDHANTHAM"

Vol. 41 — No. 3

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 41 | பிலவங்க பங்குனி 1968 மார்ச் | இதழ் 3

உள்ளுறை

உள்ளுறை		பக்கம்
சேரமானும் திருமறைக்காடும்	...	57
திருவாரூர்	...	61
மறக்கலும் ஆமோ?	...	66
மீனாட்சியம்மை கலிவெண்பா	...	72
தமிழும் முருகனும்	...	75
திருமுறையும் அருமறையும்	...	80
மதிப்புரை	...	83
கும்பகோணம் பெரிய மடத்தில் மகாமக விழா	...	86
அநுபந்தம் : இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை		1–10

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,

துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாசச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாச அலுவலகத்தில் 31—3—68 ஞாயிற்றுக்கிழமை யன்று காலை 9–30 மணிக்குச் சமாசச் செயற்குழுக்கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவு கணக்கு, பிற இன்றியமையாச் செய்திகள் பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகிறனர். (செயலாளர்)

திரு. க. இராஜகோபால் பிள்ளை,
(15, விருப்பாட்சி நடப்பு, திருவாரூர், தஞ்சை மாவட்டம்) அவர்கள் நம் சமாச ஆயுள் உறுப்பினரானமையை மகிழ்ச்சியுடன் சமாச அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சென்னை இலிங்கி செட்டித் தெருவிலுள்ள மல்லிகேச்சுரர் ஆலயத்தில் உமாமகேச்சுர பக்தஜன சபைக் கட்டிடத்தில் நம் சமாசச் சார்பில் பெரிய புராண விரிவுரையை வாரந்தோறும் வெள்ளிக்கிழமை திரு. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் நிகழ்த்தி வந்தார்கள். அதன் நிறைவு விழா 1—3—68 வெள்ளியன்று திரு. K. E. அருணாசல முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. சமாசத் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமிப் பிள்ளை, பொறியர் சுப்பிரமணிய பிள்ளை. நே. த. கிருட்டின சாமி முதலியார். வித்துவான் அம்பை சங்கரனார், பூ. ஆலால சுந்தரம் செட்டியார் போன்ற சமாச அன்பர்கள் கலந்து பெரிய புராண மாண்பு பற்றியும் திரு. செட்டியார் அவர்களின் உறைத்த பத்திப் பெருமை பற்றியும் விரிவுரையாற்றினர். நம் சமாச டிரஸ்டு நிதியிலிருந்து சொற்பொழிவாளருக்குப் பணமுடிப்பு முதலிய சிறப்புகளை டிரஸ்டுத் தலைவர் திருமுறைகாவலர் அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் வாழ்த்தி அளித்தார்கள். நம் சமாச அன்பர் சிவராம செட்டியார் போன்ற பல அன்பர்கள் இத்தொடர் சொற்பொழிவு சிறப்புற நடைபெற அவ்வப்போது உடனிருந்து தொண்டாற்றியமைக்கு சமாசம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 41	பிலவங்க ஹூ பங்குனி 1968 மார்ச்	இதழ் 3

சேரமானும் திருமறைக்காடும்

ஆசிரியர்

சேரமான் பெருமாள் நாயனார் தில்லை சென்று வழிபட்டு உளமும் புலமும் ஒருவழிச் சென்று உருகப் போற்றி, திருக்கூத்து உலகுக்கு அளித்த கருணையை வழுத்தினார். அப்போது பொன் வண்ணத் திருவந்தாதியும் பாடியேத்தினார். அந்தத் தமிழ்த் தொல் மாலைக்குப் பரிசில் என நடராஜப் பெருமான் திருச்சிலம்பின் ஒலி கேட்பித்தார்.

இது சேக்கிழார் கழறிற்றறிவார் நாயனார் புராணத்துள் கூறும் வரலாறு. பின்னர் அவர் சுந்தரமூர்த்தி நாயனாருடைய நட்பைப் பெற்று அவரோடு உடன் வந்து திருவாரூர் முதலான தலங்கள் வணங்கி, கீழ்வேளூர், நாகைக் காரோணம் ஆகிய தலங்களை வணங்கி மறைக்காடு அடைந்தார். ஆரூரிடத்துத் தமக்குள்ள ஈடுபாட்டைத் திருவாரூர் மும்மணிக் கோவை பாடி வெளிப்படுத்தினார்.

திருமறைக் காட்டில் சுந்தரரும் சேரமானும் வழிபட்ட சிறப்பைச் சேக்கிழார் பின்வரும் பாடலால் கூறுகின்றார்.

நிறைந்த மறைகள் அர்ச்சித்த நீடு மறைக்காட்டருமணியை
இறைஞ்சி வீழ்ந்து பணிந்தெழுந்து போற்றி யாழைப்பழித்து
என்னும்
அறைந்தபதிகத் தமிழ்மாலை நம்பிசாத்த அருட்சேரர்
சிறந்தஅந்தா-தியிற்சிறப்பித் தனவேயோதித்
தினைத்தெழுந்தார்.

இங்கு நம்பியாரூரர் 'யாழைப் பழித்து' என்ற பதிகம் பாடினார் என்றும், சேரமான் 'சிறந்த அந்தாதியிற் சிறப்பித்து ஓதினார்' என்றும் சேக்கிழார் கூறுகிறார். இவ்வாறு சேரமான் சிறப்பித்த செய்தியைப் பொன் வண்ணத்தந்தாதி இரு பாடலில் காணலாம்.

துயருந் தொழும் அழுஞ்சோருந் துகிலுங் கலையுஞ்செல்வப்
பெயரும்பிதற்றும் நகும்வெய் துயிர்க்கும் பெரும்பிணி கூர்ந்து
அயரும்அமர்விக்கும் மூரிநிமிர்க்கும் அந்தோ இங்ஙனே
மயரும்மறைக் காட்டிறையினுக் காட்பட்ட வாணுதலே 37

கொட்டுஞ்சிலபல சூழநின் றார்க்குங்குப் புற்றெழுந்து
நட்டமறியுங்கி ரீடிக்கும் பாடும்நகும் வெருட்டும்
வட்டம் வருமருஞ் சாரணை செல்லு மலர் தயங்கும்
புட்டங்கி ரும்பொழில் சூழ்மறைக் காட்டரன் பூதங்களே. 47

இந்த மறைக்காட்டு வழிபாட்டை நினைந்தே சேரமான் இவ்வாறு குறிப்பிட்டுப் பாடினார். இது கொண்டு மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் திருமறைக் காட்டந்தாதி ஒன்று பாடினார் என்றும், தம்முடைய 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார்; இது பொருந்தாது. அவ்வாறு சேரமான் அந்தாதி பாடிய வரலாறு எங்கும் இல்லை; எல்லாச் செய்திகளையும் நன்கு ஆராய்ந்து நாயன்மார் புராணம் பாடிய சேக்கிழார், இதை அறியவில்லை. நாமே யூகித்தறிகிறோம் என்று சொல்வது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

சேரமான் திருவாரூர் மும்மணிக் கோவையிலுங்கூட திருமறைக் காட்டைக் குறிப்பிட்டுப் பாடுகிறார்.

> ஊரெலாந் துஞ்சி உலகெலாம் நள்ளென்று
> பாரெலாம் பாடவிந்த பாயிருட்கண்-சீருலாம்
> மாந்துறைவா யீசன் மணிநீர் மறைக்காட்டுப்
> பூந்துறைவாய் மேய்ந்துறங்கா புள்.

இப்பாடலோடு பின்வரும் நம்மாழ்வார் பாசுரமும் ஒப்பு நோக்கத்தக்கது.

> ஊரெல்லாந் துஞ்சி உலகெல்லாம் நள்ளிருளாய்
> நீரெல்லாம் தேறியோர் நீளிரவாய் நீண்டதாம்
> பாரெல்லா முண்ட நம் பாம்பணையான் வாரானல்
> ஆரெல்லே! வல்வினையேன் ஆவிகாப் பாரினியே?

எனவே நாம் இங்கு கருத வேண்டுவது ஒன்று. சேரமான் பொன்வண்ணத் தந்தாதி பாடினார் எனும் போது சிதம்பரத்தில் அதைப் பாடத் தொடங்கியிருந்தார் போலும்; பின்னர் திருமறைக்காடு முதலான தலங்கள் தரிசித்து முடித்துத் தம் அந்தாதிப் பாட்டில் திருமறைக் காட்டை வீணவோடு குறிப்பிட்டு முடித்தார் என்று நாம் கருத வேண்டும். 'மறைக் காட்டருமணியை அந்தாதியிற் சிறப்பித்து' என்ற சொற்களுக்கு இவ்விதம் பொருள் சொல்வதே முறை. அவ்வாறே திருவாரூர் மும்மணிக் கோவையும் கூட, ஆரூர், மறைக்காடு முதலான தலங்களையெல்லாம் தரிசித்த பின்னர் பாடி, அதில் மறைக்காடு, கடவூர், சிராமலை முதலாகத் தாம் வழிபட்ட பல தலங்களையும் குறிப்பிட்டார் எனக் கொள்வதே பொருத்தமாகும்.

நம் சமாசக் கொடி

(துணையாசிரியர்)

நம் சைவ சித்தாந்த சாத்திரங்களுள் கொடிக்கவி என்பதுவும் ஒன்று. அதில் கொடி கட்டும் மரபு விளக்கப்பட்டுள்ளது.

உயிருக்குப் பண்டை வினையினாலே சிவஞானம் சற்று விளங்குமாயினும் அது மும்மலங்களிலே மூழ்கிக் கிடக்கும். அத்தகைய உயிர், அருளைப் பெறவேண்டிப் படிப்படியாய் உயர்நிலையெய்தி மலங்களைப் போக்கக் கொடி கட்டல் நம் பண்டையோர் மரபு.

இம்மரபை யொட்டியே கோவில்களிலும் கொடியேற்ற விழாவினை நடத்துகின்றோம். நம் சமாச ஆண்டு விழாக்களிலும் முதல் நாளில் முதற்செயலாகக் கொடியேற்றத்தை நாமும் ஆண்டுதோறும் நடாத்தி வருகின்றோம். அதற்காக ஒரு கொடி நம் சமாசத்துக்கெனத் தனிமுறையிலிருத்தல் நன்றெனச் செயற்குழுவினர் கருதுகின்றனர். இதுகாறும் விடைக்கொடியையே ஏற்றிவந்தோம். அதனைவிட இன்னும் நம் சமயக் கருத்துப் பொதிந்துள்ள தக்க கொடியொன்றை எவ்வாறு அமைக்கலாம் என்பதை அறிஞர்கள் சமாசச் செயலாளருக்கு எழுதித் தெரிவித்தால் நலமெனக் கருதுகின்றோம். பலர் பல கருத்துக்களையும் தெரிவித்தால் அவற்றுள் மிகவும் நல்லதொன்றைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பாயிருக்கும்.

மேலும் சமாசத்திற்கு என ஒரு சின்னமும் தேவைப்படுகிறது (Emblem) அதனையும் எவ்வாறு அமைக்கலாம் என்பதை அன்பர்கள் அன்பு கூர்ந்து தெரிவிப்பார்களாக. தெரிவிக்க விரும்புவோர் சமாசச் செயலாளருக்கு அது பற்றி எழுதுவார்களாக. சமாச அன்பர்கள் தங்களுக்குத் தெரியாவிடினும் அத்துறையில் வல்லாரிடம் கேட்டாவது இவைபற்றித் தங்கள் கருத்தினைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். அன்பர்கள் ஆவன செய்வார்களாக.

திருவாரூர்

(வித்துவான். பு. மா. ஜயசெந்தில்நாதன், காஞ்சிபுரம்.)

தோற்றுவாய்:— உலகில் தெய்விக நெறியில் தனிச் சிறப்புற்று விளங்குவது தமிழ் நாடாகும். இறைவன் திருக்கோலத் திருமேனிகொண்டு எழுந்தருளியுள்ள தலங்கள் தமிழகத்து எண்ணிலடங்கா. தொன்றுதொட்டே சமயவுணர்வும், அறநெறி வாழ்வும் தமிழகத்தே இருந்து வருகின்றன. தமிழகத்தை அரசாண்டோரும் கோயிற் பூசைகள் முட்டின்றி நடைபெற வழிவகைகள் செய்தவராய் வாழ்வு நடத்தினர்.

"மங்கையைப் பாகமாக உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசைநீடி ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்துவாழ்வார்",

(மெய்ப். புரா)

என்பது சேக்கிழார் பெருமான் வாக்கு. நாயன்மார்களின் அரிய சேவைகளை அநுபவித்து வளர்ந்த, வளர்ந்து வருகின்ற நாடு நம் தமிழ்நாடே, தெய்வத் தொண்டில் தம்மை ஈடுபடுத்தி வாழ்ந்து வழிகாட்டியருளிய தொண்டர்களின் அரியபெரிய அருள் வரலாறுகளைப்பெற்றுள்ள சிறப்பினதும் தமிழ்நாடே. ஆதலின் நம் நாடு 'யாதவம் செய்த தென்திசை' எனப் போற்றப்படுகிறது. இத்திசையின் இசைக்கு ஒவ்வா பிறதிசைகள்! 'பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை' என்பது உபமன்னியர் உரை. தென்திசையின் பெருமையைப் பிற முனிவர்க்கு எடுத்துக் கூறும் அம்முனிவர் முதற்கண் தம் தந்தையாராகிய வியாக்கிரபாதர் வழிபட்டுப் பேறுபெற்ற புலியூரையும், (சிதம்பரம்) அடுத்து ஐயாற்றையும், கச்சியம்பதியையும், கமலாலயத்தையும் முறையே வைத்துப் புகழ்ந்து கூறியுள்ளார். நிலமகளின் இதயகமலமாக விளங்குவது ஆரூர். "மேதினிக் காதல் மங்கை இதயகமலமாம், மாதொர் பாகனூர் ஆரூர்" என்பது அம்முனிவர் வாக்காகும்.

ஆகவே இத்தகு சிறப்புடைத் திருவாரூர் பற்றி ஈண்டுச் சிறிது நினைவு கூர்வோம்;—

திருவாரூர் - இது தொன்மை வாய்ந்த தலம். இக் கோயில் "பூங்கோயில்" என்றழைக்கப்பெறும் சிறப் புடையது. இத்திருக்கோயில் திருவாரூரினுக்கு அகமலர் போன்று விளங்குவது. இது பிறக்க முத்திதரும் தலம்.

"திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கும் அடியேன்" என்பது திருத்தொண்டத்தொகை.

"செல்வந்திகழ் திருவாரூர் மதில் வட்டத்துட் பிறந்தார்
செல்வன் திருக்கணத்துள்ளவரே யதனுற்றிகழச்
செல்வம் பெருகு தென்னாரூர்ப் பிறந்தவர் சேவடியே
செல்வநெறி யுறுவார்க் கணித்தாய செழுநெறியே"

என்பது திருத்தொண்டர் திருவந்தாதி.

இத்தலத்து இறைவன் நீங்காது எழுந்தருளியிருக்கும் தன்மையைத் "திருவாரூர்த் தொன்னகரில் பூங்கோயி லுள் மகிழ்ந்து போகாது இருந்தாரே" என்று அப்பர் பெருமான் பாடியுள்ளார்.

"தேனமர் சோலைத் திருவாரூர்" என்று புகழ்வார் மாணிக்கவாசகர். இங்கு எழுந்தருளியுள்ள பெருமான் புற்றிடங்கொண்டவர். (வன்மீக நாதர்). தியாகராசப் பெருமான், தியாகேசன், கமலைத்தியாகராசர் எனப் பல வாறு போற்றப்படும் திருநாமங்களையுடையவர். இப்பெ ருமான் சுயம்பு மூர்த்தி. இங்குள்ள சிறந்த திருக்குளம் கமலாலயம். இங்குள்ள இப்பெருமானுக்கே 'தியாகேசன்' என்னும் பெயர் பெரிதும் பொருந்தும் என்பதைக் குமர குருபரர் தம் பாடலில் அழகுபடக் கூறியுள்ளார். அப்பா டல் பின்வருமாறு:-

"வைய முழுதும் உழுதுண்ண வல்லார்க்கு
அளித்து நவநிதியும்
கைவில் ஒருவற் களித்துஎமக்கே கதிவீ
டளித்துஓர் கன்னிகைக்கு

மெய்யில் ஒருகூறு அளித்தனரால்
விமலைக் கமலைத் தியாகரென்பது
ஐயர் இவர்க்கே தகும்முகம னன்று
புகழும் அன்றுமே."

இவ்வாலயம் மிகப் பெரிய தொன்றாகும். ஓங்கி உயர்ந்து சூழ்ந்த மதில். உள்ளே உள்ளது சிறப்பான தேவாசிரிய மண்டபம். கோயிலின் உட்புறத்து அமைதியான சூழ் நிலை. புற்றிடங்கொண்டாரை வணங்குவோர்க்கு, அவரை உற்றிடங்கொண்ட அல்லியங்கோதையார் அருள் விரைவில் கிடைக்கும். தீர்த்தத்தில் இறங்கி நீராடுவ தற்குத் துறைகள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

விழாச் சிறப்புக்கள்:- ஆரூரில் நடைபெறும் விழாக் கள் பற்றிய குறிப்புக்கள் பலவற்றை நாயன்மார்களின் வாக்கில் பலவிடங்களில் காண்கிறோம். இப்பெருமான் தேரேறி ஊர்ந்து வரும் அழகினைக் கண்டு உள்ளம் மகிழ்ந்த திருநாவுக்கரசர்,

"ஊழித்தீ அன்னானை ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான்கண்டது ஆரூரே"

என்று பாடிப் புகழ்ந்துள்ளார். இவ்வாலயத்து நாளும் நல்லிசை முழங்கும். திங்கள்தோறும் திருவிழா ஒளி விளங்கும். சுருங்கச் சொல்லின் நாள்தோறும் திரு விழாவே.

முத்து விதானமும், கவரியும் சூழ்ந்துவர, பத்தர்கள் பத்திப்பண்ணிசைக்க, முனிவர்கள் துதிபாடி முன்செல்ல, நல்லடியாராம் மெல்லியலார் பின்செல்ல, திருநீறணிந்த தொண்டர்கள் பெருந்திரள் நெருங்கிப் போற்றிவரப் பவனிகொள்ளும் தியாகரை அப்பெருமான் ஒரு திருப்பதி கத்திலே வைத்துப் புகழ்ந்து போற்றுகின்றார்.

" முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர் களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்த னாரு ராதிரை நாளாலது வண்ணம் "

" முடிகள் வணங்கி மூவா தார்கண் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானர மங்கையர் பின்செல்லப்
பொடிகள் பூசிப் பாடும் தொண்டர் புடைசூழ
அடிகளாரு ராதிரை நாளாலது வண்ணம் "

ஆரூர் விழா பற்றிய சேந்தனார் கருத்தும் இங்கு நினைத் தற்குரியது.

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகுதிரு ஆரூர் "

என்பது அவர் வாக்கு.

இவ்வாரூர் வசந்த விழா நம் நம்பியாரூரரைக் கவர்ந் ததில் வியப்பில்லை.

பேறு பெற்றோர் :- தேவர்கள் தலைவனான இந்திரன் இத்தலத்து வழிபட்டுப் பேறு பெற்றான். திருமகளும் வழிபட்டுயந்தாள். "மன்னு மாமலராள் வழிபட்டது" எனபது பெரிய புராணம். மேலும் இத்தலத்தில் வாழ்ந் தும், தொண்டு செய்தும் பேறு உற்றோர்கள் பற்பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கோர் :- நமிநந்தியடிகள், தண் டியடிகள், கழற்சிங்கர், கலிக்காமர், தருமையாதீன முதல்வராகிய குருஞான சம்பந்தருக்கு ஒளி நெறியருளிய கமலை ஞானப் பிரகாசர் முதலியோராவர். பிற்காலத்து இசைபட வாழ்ந்த இசை மும்மணிகளான தியாகராசர், முத்துசுவாமி தீட்சதர், சியாமா சாத்திரிகள் ஆகியோர் பிறந்ததும் இத்தலமே என்பதும் நினைத்தற்குரியது.

ஆரூரர் வாழ்வில் :— ஆரூரர் வாழ்வின் மையமாக அவருடன் தொடர்பு பெற்று விளங்கும் தலம் இது. இதன் சிறப்பு பெரிய புராணத்துள் 'திரு நகரச் சிறப்பினுள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இத்தலத்திலேதான் 'திருத்தொண்டத் தொகை' பிறந்தது. பரவையாரை மணந்ததும், பின் வலக்கண் பெற்ற அற்புதம் நிகழ்ந்ததும் இங்கே தான். இப் பெருமானிடத்து ஆரூரர் அயரா அன்பு கொண்டு ஒழுகி வந்தார்.

'எந்தை யிருப்பதும் ஆரூர், அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்' எனப் பாட்டிசைத்துத் திரு வீதியிலே நடந்து சென்று, ஆலயத்துட் புகுந்து திருவடியே தஞ்சம் என முறையிட்டுப் பாமாலை பாடி வழிபட்டார்.

சேரமானின் வழிபாட்டை ஏற்றுக் கொண்டு கொடுங்கோளூரில் அவருடன் வாழ்ந்த காலத்தும், நாவலூர்க் கோன் உள்ளம் ஆரூர் இறைவனையே நாடிற்று. பொன்னும் மெய்ப் பொருளும் தந்து போகமும் திருவும் புணர்க்கின்ற இறைவனை மறத்தல் இயலாமையைப் பாடிக் கசிந்துருகினார் அப்பெருமானை விட்டுப் பிரிந்திருக்க நேர்ந்த காலத்தும், திசை நோக்கித் தொழுது பாட்டிசைத்துப் போற்றினார். இறைவன் நேர்மையாளன் ஆதலின், சங்கிலியாருக்குத் தந்த வாக்கினை ஆரூரர் கடந்த காலத்து அவர் இரு கண்களையும் இழக்கச் செய்தார்.

'Just because God of his comrade ever present with him he is not permitted to transgress the path of right conduct'
—('Saiva Siddhanta'-April-June '66)

பின்னர் திருவெண்பாக்கத்தில் ஊன்று கோலும், காஞ்சியில் இடக் கண்ணும், ஆரூரில் வலக் கண்ணும் பெற்றுக் குறைபாடு நீங்கினார். ஆரூரில் வலக் கண் வேண்டிப் பாடிய திருப் பதிகத்தில் (மீளா அடிமை) பாடல்தோறும் 'வாழ்ந்து போதீரே' என்று பாடியுள்ள தோழமைத் திறம் எண்ணுதற்குரியது.

இவ்வாறு திருவாரூர்ப் பெருமையைப் பலகால் விரித்துக் கூறினும் அளவிலடங்காது. விரிவு அஞ்சி இவ்வளவில் நிற்போமாக.

ஆரூர் அமர்ந்த அரசே போற்றி !

மறக்கலும் ஆமோ?

(சி. குமரேச பிள்ளை, நாகர் கோயில்.)

(முன் இதழ் தொடர்ச்சி)

குழந்தைக்குத் தாய் வேண்டியதை மட்டுமா கொடுக்கிறாள்? வேண்டியதையும் வேண்டத்தக்கதையும் அறிந்து கொடுக்கின்றாளல்லவா? அதற்குக் குழந்தை செய்யவேண்டுவ தென்ன? தாயை மறவாது சார்ந்துநிற்றல் ஒன்றேபோது மன்றோ! அதுபோலப் பால் நினைந்தூட்டும் தாயினுஞ்சாலப் பரிவுடையானை மறவாது சார்ந்து நிற்றல் ஒன்றினால் வேண்டியதும் வேண்டத்தக்கதும் முறையறிந்து அருளப்பெற இன்பநிலை தானே வந்தெய்தும். இந்த அருள் நிலையைத் தான் சுந்தரர் பெருமான்,

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை யென்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலுமாமே."

என்று அருளிச் செய்கின்றார். அன்னம் தங்குகின்ற நெல் வயல்களால் சூழப்பட்ட இயற்கையழகு மிக்க திருவாரூர் தியாகேசப் பெருமானை மறவாதுவழிபடுக. அவ்வாறு வழிபட்டால் அவன் இம்மைமறுமை ஆகிய இருவகை நலன் களையும் எய்தச்செய்வான் என்பதனையே 'பொன்னும் மெய்ப்பொருளும் தருவான், போகமும் திருவும்புணர்ப் பான்' எனக் குறிப்பிடுகின்றார். பொன் என்பது உலகச் செல்வங்களுக்குப் பொதுவான பெயர். அது ஏனைய உலகச் செல்வங்கள் அனைத்தையும் பெறுவதற்குக் கருவியாயிருக் கின்றது. இலக்குமி தேவியும் செல்வங்கள் யாவும் தருநற்

குரியவளாயிருத்தல் பற்றியே பொன்னி யெனும் பெயர் பெற்றாள். சுந்தரர் பெருமானும் சிவபெருமானை மறவாது போற்றி, இம்மை நலத்திற்குவேண்டிய பெண்ணையும், நெல்லையும் பொன்னையும் கண்ணையும் பொதி சோற்றையும் பெற்றார். இவ்வாறு இம்மை நலம் யாவும் தருதல்பற்றியே '**பொன்னும் தருவான்**' என்றார்.

உலக இன்பங்களை நுகர்தற்குரிய பொன்னைக் கொடுத்தவன் மறுமையிலும் நீங்கா இன்பம் நுகர்தற்பொருட்டுத் தன்னையே தோழமையாக அளித்து ஆட்கொள்கின்றான். அதனையே '**மெய்ப்பொருளும் தருவான்**' எனக் குறிப்பிடுகின்றார். பெற்ற இப்பிறவியில் ஆரூர்ப் பெருமானை மறவாது வழிபடுதல் ஒன்றே செய்யின், இம்மைமறுமை எனும் இருவகை நலன்களும் அமைவதாயின், பெற வேண்டும் பேறு வேறு யாதுளது?

நிறைந்த செல்வத்தைப் பெற்றாலும் அதனை நுகர்தற்குரிய பலனும் வேண்டும். நிறைந்த செல்வமிருப்பினும் நோயால் நுகரும் பலனின்றிக் கழிபவர் எத்தனை பேர்? இவறுதலால நுகரும் பலனற்றவர் எத்தனைபேர்? பொருள் தேடும் முயற்சியால் மனையநுபவம் இழந்துநிற்பவர் எத்தனை பேர்? எனவே செல்வம் பெற்றால் மட்டும் போதாது; நுகர நுகர்பலனும் உடன் கூடவேண்டும். மறவாது வழிபடுவார்க்குப் பெருமான் அதனையும் கூட்டுவிக்கின்றான் என்பதனையே '**போகமும் புணர்ப்பானை**, என்றார்.

இது போலவே மெய்ப்பொருளை உணரும் ஞானம் பெற்றாலும் மெய்ப்பொருள் இன்பத்தினை நுகர்தற்கு ஒரு பேறு வேண்டும். ஊனக் கண் பாசம் உணராப் பதியை ஞானக்கண்ணால் சிந்தையில் ஆராய்ந்தறிந்த விடத்தும் அவன் தண்ணிழலாக நின்று திருவருள் புணர்த்தாலன்றி சிவ அநுபவத்தை உயிர்கள் நுகர்தல் இல்லை. இதனையே மணிவாசகப்பெருந்தகையார் 'அவனருளாலே அவன் தாள்

வணங்கி' என்பர். தாள் வணங்குதல் என்பது சிவானந்தம் நுகர்தல். ஞானம் பெற்றும் திருவடியின்பம் முழுதும் அநுபவிக்க இயலவில்லையே என மறுகுகின்ற நிலையில்தான்

"வழங்குகின்றாய்க்கு உன்னருளாரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன்
என்விதியின்மையால்"

என்கின்றார். எனவே மெய்ப்பொருள் ஞானம்பெற்றவிடத்தும் மெய்ப் பொருளின்பம் நுகரத்திருவருள் புணர்தல் வேண்டுமென்பது புலனாகின்றது. அப்பேறு 'திரு' என வழங்கப்படும். 'திரு' என்பது முத்திச்செல்வம்; 'திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரையன்' என்று நாவுக்கரசரைச் சுந்தரர் குறிப்பிடுகின்றார். 'திரு நின்ற செம்மை;—சிவாநுபவத்தைத் தருதற்குரிய சைவ நெறி'' என்பது பொருள். எனவே மறவாது ஏத்துவார்க்கு மெய்ப்பொருளை அருளியஇறைவன், அதனை இடையீடின்றி நுகர திருவையும் கூட்டுகின்றான் என்பதனையே "திருவும் புணர்ப்பான்" என்றார்.

இவ்வுலகில் வாழ்ந்தே சிவானுபவத்தை நுகர்தல் என்பது சீவன் முத்தர்களின் தனி இயல்பு. அதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாய் இலங்கியவர் சுந்தரர். சிவபெருமானை அயரா அன்பால் வழிபட்டு இம்மை நலமும் சிவநலமும் ஒருங்கே பெற்று வாழ்ந்தவர் சுந்தரர். அவ்வாறு இருமை நலமும் இயைந்து பெற்று வாழ்ந்த பெருமையை இவ்வொரு அடியில் இணைத்துக்காட்டி அவர் நம்மை வழி நடத்துகின்றார். 'பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை என்பதனை; 'பொன் தருவானை போகம் புணர்ப்பானை' என்றும், 'மெய்ப் பொருள் தருவானை திருபுணர்ப்பானை' என்றும் நிரல்நிறையாக இணைத்துப் பொருள் கொள்ளவைத்து இருவகை இன்பப் பேறுகளையும் இணைத்துக் காட்டிய அற்புதத்தை என்னவென்பது! இவ்வுலகில் வாழ்ந்தே சிவாநுபவத்தை

நுகர்தற்குரிய நெறி சைவ நெறி யென்பதனை நுண்ணிதின் உணரவைத்த சிறப்பு எண்ணியெண்ணி யின்புறுதற்குரியது.

ஒருவன் அநுபவிக்கின்ற இன்பதுன்பங்களுக்குக் காரணமாயிருப்பது கன்மமலம். அது மூன்று வகைப்படும். அவை சஞ்சிதம் (எஞ்சுவினை) பிராரத்தம் (ஊழ்வினை) ஆகாமியம் (ஏறுவினை) என்பன. சஞ்சிதம் என்பது பல பிறவிகளில் ஆகத்தேடிய கன்மங்களில் ஊழாகக் கழிந்தவை போக எஞ்சிய வினைகளின் ஈட்டம். அதிலுள்ள ஒருபகுதி அனுபவிப்பதற்காகக் கூட்டுவிக்கப்பட்டு அதற்கேற்பப் பிறவி அமைகிறது. அப்பிறவியில் அநுபவித்துக் கழிதற்குரிய வினை பிராரத்தம். பிராரத்தம் அநுபவித்தே தீர்தற்குரியது. எனவேதான் வள்ளுவரும் 'ஊழிற் பெரு வலியாவுள' என்றார். பிராரத்தம் அநுபவிக்குங்கால் ஏற்படுகிற பலன் ஆகாமியம் எனப்படும். பிராரத்தம் முடிய, எடுத்த பிறவியும் முடிகிறது; ஏறிய ஆகாமியத்துடன் செல்லுகிறோம். அதுவும் முன்னைய சஞ்சிதத்துடன் சேர்கிறது. மேலும் சஞ்சித வினையின் ஒரு பகுதியாகிய கூட்டுவிக்கப்படுகிற பிராரத்தவினையால் பிறவி ஏற்படுகிறது. இவ்விதம் சஞ்சிதம் கழியும் வரையில் பிறவி ஏற்படுகிறது.

எனவே பொன்னும் போகமும், மெய்ப்பொருளும் திருவும் இறையருளால் கைகூடினலும் அதனை நுகர்தற்கு இப்பிறவியில் பிராரத்தமும் மேல பிறவிகளில் சஞ்சிதமும் தடையாக நிற்கும். எனவே இடையீடின்றி அருளின்பம் நுகர இக்கன்மத்தொடர்புகள் அகலவேண்டும். பெருமானை மறவாது வழிபடும் போது அக்கன்மத் தொடர்புகளையும் அறுவித்து இன்பம் நுகரச் செய்கிறான் பேருளாளன். அவ்வாறு கன்மத் தொடர்புகளை நீக்கியருளும் அருள் திறத்தையே,

> "பின்னையென் பிழையைப் பொறுப்பானை
> பிழையெலாம் தவிரப் பணிப்பானை"

எனும் அடியால் குறிப்பிடுகின்றார். 'பின்னைப்பிழை' என்பது மேல் அநுபவிக்க எஞ்சியிருக்கும் வினையாகிய சஞ்சித வினை. மறவாது ஏத்துவார்க்கு மேல் அநுபவிப்பதற்குக் காரணமாயிருக்கின்றது சஞ்சித வினை: அது அவன் திருவருள் நோக்கால் அகற்றுவிக்கப்படுகிறது. எஞ்சியிருப்பது இப்பொழுது அநுபவித்துக்கொண்டிருக்கும் பிராரத்த வினை. அரன்கழலை மறவாது அவன் அடிமையாக நின்று, பிராரத்த வினையால் வந்த செயலையாற்றி வரும்போது, அதனால் ஏற்படும் இன்பதுன்பங்கள் தன் அநுபவத்திற்கு வருவதில்லை; அஃது உடலூழாய்க் கழியும். எனவே ஆகாமியமெனும் வினையும் பெறுவதில்லை. இவ்வாறு, மறவாது வழிபடுவார்க்குப் பிராரத்தம் ஆகாமியமெனும் இருவினைகளும்கூட அறுந்துவிடுகின்றனவென்பதைத் தான் 'பிழையெலாம் தவிரப் பணிப்பானை' என்கிறார்.

'பிழையெலாம்'—என்றது பிராரத்தம் ஆகாமியம் எனும் இருவினைகளையும் பிராரத்தம் உடலூழாய்க்கழிவதையும், ஆகாமியம் ஏறுதிருப்பதையும் 'தவிர' எனக் குறிப்பிட்டார். மறவாதேத்துமடியார்கள் பிராரத்த வினைவழி நின்று தன்முனைப்போடு செய்யாது அவன்வழி நின்று செயலாற்றுதலால் 'பணிப்பானை' என்றார்.

இம்மையிலே கருணைவள்ளலாம் பெருமானை மறவாது, அயரா அன்பினால் வழிபட்டால், கன்ம வினைகளால் அநுபவிக்கின்ற, மேல் அநுபவிக்கவிருக்கின்ற பிறவித் துன்பங்களையெல்லாம் நீக்கி, திருவருள் துணையைப்பொருத்தி, அத்துணைவழி 'பொன்னும் போகமும், மெய்ப்பொருளும் திருவும்' புணர்த்துகின்ற அருள்திறத்தை என்னவென்றுரைப்பது. அவ்வாறு நுகர்ந்து நின்றவரல்லரோ சுந்தரர்.

இத்தகைய அருள் திறத்தை வாரிவழங்குவதற்காகவே பெருமான் ஆலயங்கள் தோறும் வீற்றிருந்தருளுகின்றான். இன்னதன்மையன், இவ்வண்ணத்தன், இந்நிறத்தன் என்றறியவொண்ணாப் பெம்மானாயிருந்தும், மாலுமயனும் தேடி

யும் காணவொண்ணுப் பரமனுயிருந்தும் மறவா தேத்தும் அடியார்க்கருளும் திருநோக்கோடு ஆலயந் தோறும் எளி வந்த பிரானுக அவன் அமர்ந்தருளியிருக்கின்றுன்.

"இன்னதன்மைய னென்றறிய வொண்ணு
எம்மானை எளிவந்த பிரானை"

என்கிறுர் சுந்தரர். எளிவந்த பிரானுகத் திருவாரூரில் நின்று அருள் செய்யும் திறத்தை,

"அன்னம் வைகும் வயல்பழனத்தணி
ஆரூரானை——————என்கிறுர்.

ஆரூர்—அன்னம்வைகும் வயல்ப்பழனமுடையது; அன்னம் வைகும் வயல்பழனம் இம்மை நலம்தரவல்லது. அணி—திரு. திருமுத்திச் செல்வம் தருவது. ஆரூரான்—ஆன்மாவின் ஊர்ந்துநிற்பவன். வினைவழி நில்லாது மறவாதுவழிபட்டுத் திருவருள் வழிநிற்கும் ஆன்மாவில் ஊர்ந்து செல்லுபவன். ஆன்மாக்களின் வினைப்பற்றுக்களை நீக்கி, திருவருள் துணை யைப்பொருத்தி, இம்மைநலமாம் பொன்னும் போகமும் பரமநலமாம் மெய்ப்பொருளும் திருவும் கூட்டுவிக்க எளிவந்த பிரானுய் ஆரூரில் அமர்ந்த பெருமையை இவ்வடிகளில் எத்துணை அருமையாய்ப் புலப்படுத்துகின்றுர். இச்சிறப் பினையே ஞானசம்பந்தப் பெருமானும்,

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

என்கிறுர்.

இத்தகைய பெருமானை 'மறக்கலுமாமே'—
மறக்கலாமோ?

"துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்"

என்றுர் பிள்ளைப்பெருமான்—அவ்வாறு மறவாது நினைப் போம்.

"தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனே"

என்றுர் அப்பர்—தினைப்பொழுது அவனை மறந்தாலும் உய்தலரிது. ஆகவே மறக்கலு மாமோ?"

திருச்சிற்றம்பலம்

மீனாட்சியம்மை கலிவெண்பா

(அம்பை சங்கரனார்)

ஸ்ரீ மீனாட்சியம்மை கலிவெண்பா என்னும் நூல் அருள் திரு திருப்போரூர் சிதம்பர சுவாமிகளால் பாடப் பெற்றது. மதுரையில் திருவவதாரம் செய்த சிதம்பர சுவாமிகளை மீனாட்சியம்மையார் அருள்பாலித்துச் சிறந்த ஞானியாராகத் திருவுளம் பாலித்தார். அவ்வம்மையின் அருள் வாய்க்கப் பெற்ற சுவாமிகள் அத்தாயைப் பற்றியே புகழ்ந்து பாடிய முதல் நூல் மீனாட்சியம்மை கலிவெண் பாவாகும். எவ்வாறு குமரகுருபர சுவாமிகள் திருச்செந் தூர் முருகன் திருவருள் வாய்க்கப் பெற்று கந்தர் கலி வெண்பாவைப் பாடியருளினார்களோ அதேபோன்று திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளும் இம் மீனாட்சியம்மை கலிவெண்பாவைப் பாடியருளினார்கள். ஆகவே அருள் வாய்க்கப் பெற்ற பெரு மக்கள் திருவாயிலிருந்து முதன் முதல் கலித்தெழுவது கலிவெண்பாவே போலும்.

இந்நூல் பல அருமையான சிறப்பியல்புகளைப் பெற் றொளிர்கிறது. இதனைப் படிப்பார்க்கு அவ்வுண்மை நன்கு புலனாகும். அம்மையின் புகழைப் பரக்கக் கூறக் கருதிய சுவாமிகள் பெருமான் புகழையெல்லாம் அம்மை யின் புகழாகக் கூறியருளிய திறம் மிகவும் போற்றத்தக் கது. பெருமான் ஆடிய திருவிளையாடல்களை யெல்லாம் அம்மையின் திருவிளையாடல்களாகக் கொண்டு திருவிளை யாடற் புராண வரலாறுகளில் கண்டபடி அம்மையையும் அவ்வச சாதிப்பெண்ணாகச் சுவாமிகள் பாடியருளிய திறத் தை இந்நூலில யாண்டும் காணலாம். அவ்வாறு வெளி நோக்கிற்குப் பல சாதிப் பெண் பெயர்கள் போன்று கூறி யதாகத் தோற்றினும் அப்பெயர்கள் யாவற்றையும் சிலே டைப் பொருள் நயம பொருந்த அமைத்துப் பாடியிருக்கும் அடிகளாரின் தெய்வீகப் புலமைத் திறத்தை வியந்து எவ் வாறு போற்றுவது !

இந்நூலில் நவ கோணம், முக்கோணம், சட்கோணம், எண்ணிரண்டாம் கோடு, நாற்பத்து முக்கோணம், பஞ்ச கோணம் முதலிய பல சக்கரங்களின் பெயர்களும் அவற்றுள் உள்ள மந்திரப் பொருளாயிருப்பவள் உமையம்மையார் என்று கூறும் நிலையையும் காணலாம். அக்கோணங்கள் யாவை? அவற்றுள் உள்ள மந்திரங்கள் யாவை? ஆகியவைகளை யெல்லாம் தக்க பெருமக்கள் நம் சித்தாந்த இதழ் வாயிலாய் எழுதின் நம் சமய உலகுக்கு அவர்கள் பேருபகாரியாவர் என்பது திண்ணம்.

நம் முன்னோர் இத்தகைய கோணங்களையும் மந்திரங்களையும் ஏடுகளில் எழுதி வரன் முறையாய்த் தம் மாணவர்களுக்குக் கற்பித்து வந்தனர். அந்நெறிமுறை தற்காலத்து அருகிப் போயுள்ளது. இந்நிலையில் இத்தகைய மந்திரக் கலையில் வல்லுநர் சிலர் இருக்கலாம். அவர்கள் தங்கள் கால் வழியினருக்கும் கற்பிக்காமல் நூல் வாயிலாயும் எழுதி வைக்காமல் தங்கள் வாழ்நாளைக் கழிக்கின் பிற்காலத்துச் சிறந்த உண்மைகளை யெல்லாம் இழந்த தீயூழினராவோம். திருமந்திரம் போன்ற நம் சமய நூல்கள் பலவற்றில் இத்தகைய பல கோணங்களின் பெயர்களும் மந்திரங்களின் பெயர்களும் வருகின்றன. அவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து ஒருதக்க நூலாக வெளியிடின் நம் சமயக் கருவூலத்தின் ஒரு பகுதியைக் காத்த பெருமை அப் பெரியார்களைச் சேரும். ஆதீன கர்த்தர்கள் இவ்வரும்பணியில் தக்காரை ஊக்கி இத்தகைய நூல்களை வெளிவரச் செய்ய அடிபணிந்து கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் யோக நிலை பற்றிய பல உண்மைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவற்றை அத்துறை வல்லார் இனிதுணர்ந்து இன்புறற் கேதுவாகும். யோக முறை பற்றியும் பலவாறு பேசப்படுகிறது. எவர் எவ்வாறு கூறினும் யோக முறை நம் சமயப் படிமுறைகளில் ஒரு தலையாய இடத்தைப் பெற்றுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே அத்துறையில் வல்லாரும்

தாம் கண்ட உண்மையைப் பிற்கால மக்களுக்குறு துணை யாயிருக்க நூல் வாயிலாய் எழுதி உதவுவார்களாக.

மீனாட்சியம்மையை வணங்குதற்கு இதனின் தக்க தோர் எளிமையான உருக்கம் தரத்தக்க நூல் வேறு இல்லை யென்றே கூறலாம். தாய்மொழி மூலம் வழிபாடாற்ற வேண்டும் என்று பலரும் விரும்புகிற இக்காலத்து சிதம் பர சுவாமிகள் இந்நூலில் 238 திருப் பெயர்களால் அம் மையை விளித்து அருள் பாலிக்க வேண்டுகிறார். இதனை நான்கு முறை தினந்தோறும் உருகிப் பாடினால் ஏறக் குறைய ஆயிரந் திருநாமத்தால் அருச்சனை செய்த பலனைப் பெறுவது திண்ணம். இவ்வாறு சிறந்த பெருமைகள் பல இந்நூலுக்குள.

இந்நூலைப் பாடிய பின்னர் மீனாட்சியம்மையின் அருளைப் பெற்ற சிதம்பர சுவாமிகள் அம்மையின் ஆணையைப் பெற்று, பாண்டி நாட்டிலிருந்து தொண்டை நாட்டி லுள்ள திருப்போரூர் போந்து அங்கு ஏற்கெனவே மறைந் திருந்த முருகன் ஆலயத்தைப் புதுப்பித்த வரலாறும் திருப்போரூர்ச் சந்நிதிமுறை பாடி முருகன் அருள் பெற்ற வரலாறும் குமார தேவர், சாந்தலிங்க சுவாமிகள் கடைக் கண்ணேக்குற்றுச் சிறந்த வரலாறும் உலகறிந்த உண்மை களாம். இத்தகைய முனிபுங்கவரால் பாடப் பெற்ற பெருமை மிக்க நூலை யாவரும் படித்து மீனாட்சியம்மை யின் அருளுக்குத் தங்களை உரித்தாக்கிக் கொள்வார் களாக.

பிற செய்திகள்

திருவாப்பனூர் சைவ சித்தாந்த சபையின் ஆதரவில் திருவெம்பாவை நிறைவு விழா 14—1—68 ஞாயிறு மாலை திரு. அ. சண்முக சுந்தரம் அவர்கள் தலைமையில் நிகழ்ந் தது. திருமதி இராசம் மரகதம் அவர்களும் திரு. வித்து வான் தா. குருசாமி அவர்களும் முறையே "பாவைச் சிறப்பு", "பாவை நோன்பு" என்பன பற்றிச் சொற் பொழிவாற்றினர்.

தமிழும் முருகனும்

(வித்துவான் பி. சொ. சண்முகம் பிள்ளை)

" இருந்தமிழே உன்னு லிருந்தேன் இமையோர்
விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன் "

என்னும் அடிகள் நம் தமிழ் மொழியின் தனிப் பெருஞ் சிறப்பினை நன்கு புலப்படுத்தும். அமிழ்தத்தினும் ஆற்றல், இனிமை முதலியன மிகப் பயக்கும் தமிழின் சுவை கண்டார், அமர வாழ்வுற்றாரெனில் அது மிகையாகாது.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி முத்த குடியினர் நம் தமிழர். அவர்தம் மொழியும் சாலப் பழைமை வாய்ந்த தொன்றாம். அவ்வாறு பழைமை பெற்றும் கால நீட்டிப்பால் கருச் சிதையாமல் கோலக் குமரியாய் எத்திசையும் புகழ் மணக்கும் கன்னியாய்ப் புதுமை பெற்றுப் பொலிவுறுவது நம் அருந்தமிழ் மொழியே.

" முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழம்பொருளாய்ப்
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாய் "

விளங்கும் சிவபரம் பொருளை ஒத்து மிகவும் சீர்மையுடைய நம் செந்தமிழ் மொழியும் ஏற்றம் பெற்றுள்ளது. மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்,

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி இருப்பது போல்"

நம் தமிழ் மொழியும் அழியா இளமையுடன் விளங்குகிறது என்று கூறியுள்ளார். இவ்வாற்றால் நம் தமிழ் முழுமுதற் கடவுளாம் சிவபரம் பொருளை ஒத்து ஏற்றம் பெற்றுள்ளதை அறியலாம். சிவபரம் பொருள் என்றாலும் முருகு என்றாலும் ஒன்றே. சிவனை ஐம்முகச் சிவனென்றும் முருகனை அறுமுகச் சிவனென்றும் வாழ்த்தி வழிபடுமாறு அருளிப் போந்தனர் பாம்பனடிகள். பெயர் வேற்றுமையேயன்றி இறுதியாக எல்லாம் ஓரே பரம்

பொருளையே உணர்த்தி நிற்கும் என்பதனைத் தெரிந்து கோடல் நன்று. இதுவே நம் பண்டைத் தமிழர் கண்ட முடிவாகும்.

'தமிழ்' என்னும் சொல் 'முருகு' என்னும் சொல்லோடு பல்வேறு நிலைகளில் ஒத்த பான்மையினதாய்த் திகழ்ந்திருப்பது ஓர்ந்து மகிழ்தற்குரியதாம். தமிழ் மூன்றெழுத்துக்களாலாயது; மூவினங்களையுமுடையது. இவ்வமைப்புக்களையே 'முருகு' என்னும் சொல்லும் கொண்டு விளங்குவதைத் தெளிக. மேலும் பொருட் பொருத்தமும் இரு சொற்களுக்கும் ஒரே நிகராயுள்ளது.

'முருகு' என்னும் சொற்கு இளமை, மணம், கடவுள் தன்மை, அழகு முதலிய பல பொருள்களுள்ளன. அப் பொருள்கள் யாவற்றையும் 'தமிழ்' என்னும் தனிச் சொல் கொண்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக் குரியதோர் செய்தியாகும். கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாய் இயற்கை வடிவாய்த் திகழும் முருகன் உலக மக்களுக்கு முதல் தெய்வமாய் விளங்குவது போன்று நம் அருமைத் தண்டமிழ் மொழியும் உலக மொழிகளுள் முதன்மையானதாய் விளங்குகிறது. அதனாலேயே 'மொழிகள் குலத் தனி விளக்கே' என ஆன்றோர் நம் மொழியின் பெருமை பற்றிப் புகழலாயினர். எழுத்தெல்லாம் அகரத்தை முதன் முதலாகக் கொண்டு திகழ்வது போன்று இவ்வுலகமும் இறைவனும் முருகை முதலாகக் கொண்டு மிளிர்கின்றது. எழுத்தினை அறிய முற்படுவோர் முதலில் அகரத்தை அறியவேண்டுவது போன்று உலகத்தை அறிய விரும்புவரும் இவ்வுலக முதல்வனும் முருகனை அறிதல் இன்றியமையாது வேண்டப்படுவ தொன்றாம். உலக மொழிகளின் எல்லா எழுத்துக்களுக்கும் அகரம் தலைமையிட தைதப் பெற்றிருத்தல் போன்று ஐம்பூதங்களாலாய இவ்வுலகின் சேர்க்கைக்கு முருகனும் இறைவன் தலைவனாய் விளங்குகின்றான். அகரம் எழுத்தால் பருப் பொருளாயும் ஒலியான் நுண் பொருளாயும் மறைந்து உயிர்களுக்கு அறிவு விளக்கம் தருவது போன்று ஆதிபகவனாகிய முருகனும் உருவத் திரு மேனிதாங்கி பருப்பொருளாகவும் அரு

வத்திருமேனி கொண்டு நுண் பொருளாகவும் திகழ்ந்து இவ்வுலகத்துயிர்களுக்கு அருள்பாலிக்கின்றான். எல்லா எழுத்துக்களின் ஒலியிலும் அகர ஒலி விரவி நின்று அவ்வெழுத்துக்களை ஒலித்தற்கு மூல காரணமாக விளங்குகிறது. அகரம் கலவாத எழுத்துக்களே கிடையாது எனலாம். அதனைப் போன்றே நம் பரம் பொருளாம் முருகனும் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்து கலந்துலவுகிறான். மற்றும் எளிமை, ஆதியும் அந்தமும் அறியா நிலை, முதன்மை யாதிய பல காரணங்களாலும் தமிழும் முருகனும் தம்முள் ஒத்து இயைந்திருத்தலையாண்டும் காணலாம்.

முருகன் அருள் பெற்றுயர்ந்த நக்கீரரும் அருணகிரியாரும் தண்டமிழால் அவன் இசையைப் பாடியே உயர்ந்தோங்கினர். முருகன் தென் திசைச் செந்திற் பதியிலும் வடவேங்கட மலையிலும் கோயில் கொண்டு தமிழ்நாட்டுப் பாதுகாப்பாய்ச் சிறப்பாயமைந்து உலகத் திறையாய்ப் பொதுவாய் விளங்கும் பெருமையுடையவன் ஆவன். வட வேங்கட மலை முருகன் பதிய்ய பிற்காலத்து வைணவத்தலமாயிற்றென்பது ஆராய்ச்சியாளர் கூற்றாகும். வேங்கட சுப்பிரமணியன், வேங்கட சுப்பையா என்ற பெயர்களும் இதனை வலியுறுத்தும். தமிழ் இவ்வெல்லைக் குட்பட்டுச் சிறப்பாயும், பண்பாட்டால் இறை நலத்தால் உலகத்தையுமே இணைத்துச் செல்லவல்ல ஒண்மொழியாகும்.

முருகப் பெருமான் உலகத்துயிர்களைக் காப்பது போன்று தமிழுக்கும் ஒவ்வொரு காலத்து ஏற்படும் இழுக்கினையும் அவ்வப்போது வந்து நீக்கி அருள் பாலித்துள்ளமை ஆராய்வார்க்குப் புலனாகும். அகப் பொருளிலக்கணம் இன்மை கண்டு களவியல் நூலைத் தந்தாட் கொண்டதுமன்றி அதற்கு உரை காண்போர் தம்முட்கலாய்த்த சமயத்தும் காரணிகனாய உருத்திரசன்மனாய் அம்முருகனே வந்து உண்மையுரை இதுவென உலகறியச் செய்த பெருமையினை உணராதார் யார்? நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தப் பெருமானார் முருகனின்

திருவவதாரமே என்னும் கொள்கை முற்றத் துறந்த முனிபுங்கவர் பலராலும் ஒப்ப முடிந்த உண்மையன்றோ!

தமிழுக்குத் தாழ்வு கற்பித்த சமயத்து அவ்வாறு செய்தாரை அழித்த வரலாறுகள் நம் தமிழ் மொழியில் அளப்பில உள. அவ்வரலாறுகளிலிருந்து தமிழ்ப் பகைவர்களிடமிருந்தும் நம் தமிழ் அவ்வக் காலத்து நன்கு போற்றப்பட்டமையைத் தெள்ளிதின் உணரலாம்.

மேலும் முருகனைப் பற்றிக் கூறும் தமிழ் நூல்கள் கணக்கிலடங்கா. அவற்றுள் எளிமையாய், சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தன்னுட் கொண்டதாய் உருகி ஓதுவார்க்குக் கைமேல் பலன் தரத் தக்கதாய், பலகாலும் அனுபவத்தாலும் பலன் கண்டதாய் உள்ளது என்னைப் பொறுத்தவரை குமரகுருபர சுவாமிகள் அருளிய கந்தர் கலிவெண்பாவே யாகும். ஐந்து வயது வரை ஊமையாயிருந்து செந்தில் முருகன் திருவருளால் பேசும் திறம்பெற்ற குமரகுருபர அடிகள் "பூமேவு செங்கமலப் புத்தேளும்" என்னும் தொடக்கத்ததாகவுள்ள நூலை அருளியுள்ளமை மிகப் பொருத்தமாக வுள்ளது. ஊமைப் பிள்ளை பேசத் தொடங்குங்கால் பூ பூ பூ என்னும் ஒலி பொருந்தப் பேசுவது கண்கூடன்றோ!

குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் சிவனும் முருகனும் ஒன்றே என்னும் கருத்தை வலியுறுத்துவதை யாண்டும் காணலாம். சமயங் கடந்து விரிந்து ஓங்கும் சன்மார்க்க நிலையாக முருக வழிபாட்டைச் சுட்டிச் சிறப்பித்து அடிகள் கூறுகிறார். 'கருணை நிலையே கந்தன்' என்பது முதலாய் பல உண்மைகளை இந்நூலிலிருந்து காணலாம்.

'புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்'
'பாசவிருள் துறந்து பல்கதிரில் சோதிவிடும்
வாசமலர் வதன மண்டலமும்'

என்பன போன்ற அடிகள், அடிகள் முருகன் பாலிடத்துக் கொண்ட அன்பையும் அதனால் துய்த்தறிந்த ஈடுபாட்டு மேன்மையையும் நன்கு புலப்படுத்தும். நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை சொற்செறிவும் பொருட்செறிவும் உடையதாய்ப் புலமை சான்றவர்களே உணரத் தக்க அரிதுணர் பொருள்களோடு கூடியது. கந்தர் கலி வெண்பாவோ அவ்வாறின்றி எளிமை விரவி ஓரளவு தமிழறிவு உடையோரும் ஓதி உய்யும் பெற்றிமையை யுடையது. திருமுருகாற்றுப்படை வீரத் தமிழ் நடை பெற்றிலங்குவது, இக்கலிவெண்பாவோ பத்தர்கள் மனமுருக்கும் ஈரத் தமிழ் நடைபெற்றிலங்குவது.

குமரகுருபர அடிகள் கந்தர் கலிவெண்பா மூலம் இறுதியாக வேண்டிக் கொள்வதும் தமிழைப் பற்றிய செய்தியாகவே உள்ளமை அறிந்தின் புறற்குரிய தொன்றும்.

“ ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகை யும்ஓசை
எழுத்து முதலாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் தம்மைவிடுத்
தாயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்டு
அடியேற்கு முன்னின் றருள் ”

புரசைத் திருநெறிக்கழகத்தின் 84 ஆம் திங்கள் வழிபாடு திருஅச்சிறுபாக்கம், திருஇடைச்சுரம், திருப்போரூர் ஆகிய மூன்று தலங்களிலும் 18–2–68 அன்று நிகழ்ந்தது.

மேற்குறித்த கழகத்தின் சார்பில் திருமுறை விழா 25–2–68 ஞாயிறன்று புரசை வேம்படி விநாயகர் ஆலயத்தில் சிறப்புற நிகழ்ந்தது.

திருமுறையும், அருமறையும்

–(சிவ. மீனாட்சி சுந்தரசிவை, சென்னை)–

கடவுளருளால் பிறப்பெடுத்த உயிர் நற்றவம் முதலி யவற்றைச் செய்து, பிறப்பை அகற்றி, பிறவாப் பெரு நெறி பற்றி, மீண்டும் பிறவாது, முதல்வன் திருவடிகட்கு மீளா ஆளாய், பேரின்பம் துய்த்துச் சிறப்பெய்த வேண்டுவது உரிமையும், கடமையும் ஆகும். இவற்றை விளக்குவதே பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சித்தாந்த நூல்களும் ஆகும்.

உலக வாழ்க்கைக்கு உடலோம்பி, உயிர் வாழ வாழ்க்கை நூலும், திருவடி வாழ்க்கைக்கு உடலும், உயிரும் ஓம்பி வாழ்தற்குரிய வழிபாட்டு நூலும், அவ்வழி படும் முறைகளை இலக்கண வகையால் உணர்த்தும் வழி பாட்டு அமைப்பு நூலும், அவ்வழிபாட்டால் பெறப்படும் வான் பொருள் மெய்ந் நூலும் என நூல்கள் நால்வகைப் படும்.

இவற்றில் வாழ்க்கை நூல் அறம், பொருள், இன்பம், வீடென்னும் உறுதிப் பொருள் நான்கும் உணர்த்தும் தெய்வத் திருக்குறளாகும். வழிபாட்டு நூல் சீலம், நோன்பு, செறிவு, அறிவு (சரியை, கிரியை, யோகம், ஞானம்) என்னும் உய்திப் பொருள் நான்கும் உணர்த்தும் நால்வர் அருளிய திருமுறைகளாகும். வழிபாட்டு அமைப்பு நூல் தனித் தமிழ் சிவாகமம் என்று சொல்லப் படும் திருமந்திரம் ஆகும். வான் பொருள் மெய்ந் நூல் மெய்கண்ட நாயனார் அருளிய தனித் தமிழ்ச் சிவஞான போதமாகும்.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்–கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

தேவர் குறள் உலகியலும் எல்லாச் சமயமும் அடங்கியதாகும். திருநான்மறை அது பண்டைத் தமிழ் நான் மறை

களைக் குறிக்கும். அறம், பொருள், இன்பம், என் வீடு னும் நாற் பொருளையும் குறிக்கும் நூல்.

"சுழிந்த கங்கை தோய்ந்த திங்கள் தொல்லரா நல்லிதழி
சழிந்த சென்னிச் சைவ வேடந் தான்நினைத் தைம்புலனும்
அழிந்த சிந்தை யந்த ணாளர்க்கறம் பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் முக்க ணாதி மேய முதுகுன்றமே"

இதில் ஞானசம்பந்தர் அறம், பொருள், இன்பம், வீட்டைத் தெளிவாகக் குறிக்கிறார். ஆதலின் நான்மறை தமிழில் இருந்திருக்க வேண்டும். பிற் காலத்தில் அழிந்திருக்க வேண்டும்.

மறை முடிவாம் ஆகமம் : ஞானத்தையும், கன்மத்தையும் குறிக்கும் சிறப்பு நூல்கள்.

திருநான் மறையாம் : மூவர் தமிழ்.

மறை முடிவாம் முனிமொழியும் : திருவாசகம். திருக்கோவையார் ஐந்தாவதாகச் சொல்லப்படுகிற திருவடிப் பேறு.

திருமூலர் சொல் : தமிழ் ஆகமம். இவையெல்லாம் ஒரு பொருளை அடைவதற்கு வழி காட்டும் செவியறிவு (உபதேச) நூல்கள் ஆகும்.

இன்பம், பொருள், அறம், வீடு என்னும் நூலில்,

1. இன்பம் அகத்திணை
2, 3. பொருளும் அறமும் புறத்திணை
4. வீடு அறம் காரணமாகப் பெறுதலால் அதுவும் புறமே,
5. பேறு அது அகம்.

ஆண்டான் அடிமைத் திறத்தில் உயிரும், கடவுளும் காதல் மிகுதியால் ஒன்றாகச் சேர்ந்து பேரின்பம் துய்க்கும். ஆகவே முதலும் கடையும் (இன்பமும், பேறும்) அகம். இடையில் இருப்பது புறம். (பொருள், அறம், வீடு)

இவைகளை அடைவதற்கு வழி வகைகளைச் சொல்வது திருமந்திரம், இது நூல்; இலக்கணம். மற்றவை செய்யுள். இலக்கியம். மெய்கண்டார் நுவலும் நூல் இலக்கணமே. விரிந்த திருமந்திரத்திலிருந்து தெளிந்த, சுருக்கமான ஞானப் பகுதியை விளக்கும் நூல்.

'மூவர்தமிழ் மும்மறைஅம் மூவா மறைமுடிவாம்
மேதேவர்தொழும் வாதவூர்த் தேவர்தமிழ் – தேவெழுதும்
பேறு திருக் கோவை அம்மை பெற்றவர் காட்டாம்
ஈறில்மெய்கண் டார்தமிழ்நூல் ஏத்து"

மூவர் தமிழ்: இன்பம், பொருள், அறம் காட்டும் மும்மறை.

மூவா மறை முடிவாம்: அம் மூன்றின் முடிவு திருவாசகம்

பேறு: திருக்கோவையார், பேறு பெற்றவர் காரைக் காலம்மையார்.

மூவர் தமிழும் முப்பொருள் உண்மையைக் கூறுகிறது. ஞானசம்பந்தர் தமிழ் பதியுண்மையைக் கூறுகிறது. 'தோடுடைய செவியன்' என்பதில் பதியுண்மை கூறப்படுகிறது.

அப்பர் தமிழ் பாசவுண்மை கூறுகிறது. சூலைநோய் கூற்றாகவே வருகிறது ஆதலின் பாசத்தன்மை "கூற்றாயினவாறு" என்பதில் பாசவுண்மை அறிவிக்கப்படுகிறது. அடிமைத்தன்மை பசுத்தன்மை. சுந்தரர் "அடிமை அல்லேன்" என்பதால் பசுத்தன்மையை உணர்த்துகிறார். முப்பொருள் உண்மை உணர்ந்த நிலை மறைமுடிவாகிய ஞானப்பகுதி; அது திருவாசகம். நமச்சிவாய என்று தொடங்குவதால் ஞானப்பகுதி ஆயிற்று.

ஆண்டவன் திருவடிப்பேறு அடைவதுதான் மக்கட் பிறப்பிற்குள்ள ஊதியம். அது திருக்கோவையாரில் யாவர்க்கும் ஊதியமே என்று முடிக்கப்படுகிறது, வழிபடுதல்–இன்பம். வழிபாட்டின் பயன்–ஞானம். ஞானப் பால் உண்டல்-ஞானப்பகுதியை உண்டல். பால்-பகுதி.

–(தொடரும்)

மதிப்புரை

'கொங்கு நாட்டுக் கோயில்கள்' என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் சிவகலை மு. சுப்பையா ஆவர். இது தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கச் சார்பில் வெளியிடப் பெற்றது. இந்நூலில் பழநி முதல் சிரவைக் கௌமாரத் திருமடம் முடிய 28 திருத்தலங்களைப் பற்றிய விவரங்களைக் காணலாம். ஆசிரியர் சிறந்த கடவுள் பற்று நிறைந்தவராதலின் இந்நூலைப் படிப்போரையும் நேரே அத்திருத்தலங்களைக் காட்டுவது போன்றும் அங்கங்குள்ள இறைவனுறைவிடங்களை மிகவும் சிறப்புற விளக்குவது போன்றும் அமைப்பு முறை விளங்கியுள்ளது. நடை மிகவும் கவர்ச்சிகரமாயிருக்கிறது. இன்றியமையாத விடங்களுள் அவ்வவ்வூர்ப் பகுதிப் படங்களையும் காட்டியிருப்பது மிகவும் இந்நூலுக்கு ஏற்றத்தைத் தருகின்றது. 306 பக்கங்களுடன் நல்ல அச்சினைப் பெற்றுத் திகழ்வதிந் நூலாதலின் அன்பர்கள் யாவரும் வாங்கிப் படிப்பார்களாக. நூல் நிலையங்களுக்கு இதனைப் போன்றவை மிகவும் அவசியம் வேண்டற்பாலன. அன்பர் இதனைப் போன்றே பிற நாட்டுத் திருத்தலங்களையும் பற்றி எழுத முற்படுவாராக. விலை ரூ 6-00. வேண்டுவோர் 'தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் X-417, 9, சின்ன ரெட்டித் தெரு, எழும்பூர். சென்னை-8,' என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

—(அம்பை)

சிதம்பரம் திரு நா. மு. பொன்னம்பலம் பிள்ளை அவர்களின் 60-ஆம் ஆண்டு நிறைவு விழா நூல் வெளியீடாக விநாயகர் அகவல், திருச்செந்தூர்க் கந்தர் கலி வெண்பா என்னும் இரண்டு நூல்களும் (புலவர் ந. ரா. முருகவேள் M.A., M.o.L., அவர்கள் உரையுடன் கூடியது) வரப்பெற்றோம். திருச்செந்தூர்க் கந்தர்கலி வெண்பா மிகவும் சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கொண்டது. அதற்குப் பலவிடங்களில் சிறந்த விரிவான விளக்கங்கள் எழுதின் அன்பர்கள் பலரும் பயனடைதல் கூடும். இந்நூல் பதவுரையை மட்டும் பெற்றிருத்தலின் அவ்விளக்கங்களைப்

பெறவில்லை. இவ்வுரையாசிரியர் அவ்வாறு இந்நூலுக்கு ஒரு விளக்கவுரை சமயக் கருத்துக்களைத் தெளிவு படுத்தும் வகையில் எழுதி உதவுவாராக. 52 பக்கங்களுக்கு மேலாக உள்ள இந்நூல் நல்ல அச்சுடன் பிழையறப் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. யாவரும் இவ்விரண்டு பாராயண நூல்களையும் வாங்கிப் படித்துத் தம் வாழ்நாளைப் பயன்படுத்திக் கொள்வார்களாக. விலை குறிக்கப் பெறவில்லை. மணிவிழா போன்ற சிறந்த நாட்களில் இவ்வாறு சமய நூல்களை வெளியிட்டுச் சமயத் தொண்டு செய்யப் பிறருக்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் திரு. பிள்ளையவர்களின் பண்பு போற்றத்தக்கது. இதனைப் போன்று பிற செல்வர்களும் தத்தம் இல்லங்களில் நிகழும் நல்விழாக்களின் நினைவாக நம் சமய நூல்களை வெளியிட்டு மக்கள் சமயத் துறையில் அறிவு விளக்கம் பெற உதவுவார்களாக. இந்நூல் வேண்டுவோர், 'கஸ்தூரி பாய் கம்பெனி, தபால் பெட்டி எண் 2, மேல வீதி, சிதம்பரம்' என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். நூல் அனுப்புதற்குரிய அஞ்சல் தலையை மாத்திரம் அனுப்பி வைக்க வேண்டும். (அம்பை)

'தமிழ்த் தாய்த் திருப்பள்ளி யெழுச்சி' என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் வித்துவான் ஆ. சிவலிங்கனார். (தலைவர், ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்) ஆவர். பத்துப் பாக்களைக் கொண்ட இத்திருப்பள்ளி யெழுச்சிக்குப் புலவர் மாமூலனார் கருத்துரை, சிறப்புரை முதலியன நன்கு எழுதி நூலின் சிறப்பை இன்னும் அழகுபடுத்தியுள்ளார். பாக்கள் யாவும் பத்தி நலம் பொருந்தியுள்ளவை. ஆசிரியர் தக்க அறிஞர் ஆதலின் தம் பரந்த கல்விப் புலமையை இப்பாக்களில் அங்கங்குப் புலப்படுத்தி யிருக்கின்றார். யாவரும் வாங்கிப் படித்துப் பயனுறுவார்களாக. 32 பக்கங்கள் கொண்ட இந்நூல் விலை ரூ 0-75 காசுகள். நூல் கிடைக்குமிடம் 'மாணிக்கம் பதிப்பகம், 43, முருகப்ப முதலி தெரு, புரசைப்பாக்கம், சென்னை-7 என்பதாகும்.
(அம்பை)

'வள்ளுவரைப் பற்றி' என்னும் வரிசையில் 7 ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய முதல் நூல் வரப் பெற்ழேம். இதன் ஆசிரியர் வித்துவான் ஆ. சிவலிங்கனுர், (முதல்வர், ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்) ஆவர். இந்நூலில் காணப் பெறும் கட்டுரைகள் யாவும் அறிஞர் பெருமக்களிடையே நீண்ட காலமாகத் தெளியப் பெருத திருக்குறட் பகுதிகளை யுடையவை யாகும். அப்பகுதிகளை எடுத்து விளக்கி அவற்றிற்குத் தக்க மேற்கோள் காட்டி தனது கருத்தினை விளக்கிச் செல்லுந் திறம் மிகவும் சிறப்புடைத்து. இது சிறந்த ஆராய்ச்சி நூலாதலின் ஆராயும் கருத்துடையார்க்குப் பெரு விருந்தாயமையும். ஆராய்ச்சியில் மாறுபட்ட கருத்துக்கள் எழுவதியற்கை. இருப்பினும் ஆசிரியர் கருத்துக்களும் அவற்றிற்குரிய மேற்கோள் முதலியனவும் இங்குத் தெற்றென விளக்கப்பட்டுள்ளன. யாவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக. 88 பக்கங்களுக்கு மேல் கொண்ட இந்நூல் விலை ரூ 1-75 ஆகும். நூல் கிடைக்குமிடம் 'மாணிக்கம் பதிப்பகம், 43, முருகப்ப முதலி தெரு, புரசைப்பாக்கம், சென்னை-7.

(அம்பை)

இராமாபுரம் ஆசிரியர் திரு இரா. கிருஷ்ணசாமி நாயக்கர் அவர்களின் இருபத்தாரும் ஆண்டு நினைவு வெளியீடாக 'திருப்போரூர்ச் சந்நிதி முறைத் திரட்டு' என்னும் நூல் ஒன்றும் இருபத்தேழாம் ஆண்டு நினைவு வெளியீடாக விநாயகர் மாட்சி, ஆண்டீரூர் அறவுரைகள் என்பவை பொதிந்த நூல் ஒன்றும் வரப் பெற்ழேம். நினைவு நாட்களில் இவ்வாறு சமயத்தொண்டு குறிதத்துத் தக்க விளக்கம் தரவல்ல வெளியீடுகளை வெளியிட்டுதவும் ஆசிரியர் திரு. இரா. கிருஷ்ணசாமி நாயக்கர் அவர்களின் திருமகனுர் R. K. சச்சிதானந்தம் அவர்களின் முயற்சிக்குப் பாராட்டுகிழேம். இப்பிரதிகள் வேண்டுவோர் 25 காசுகள் மதிப்புள்ள தபால் தலைகள் அனுப்பின் அனுப்பி வைக்கப் பெறும். நூல் கிடைக்குமிடம், 'R. K. சச்சிதானந்தம், 16, கிருஷ்ணமாச்சாரி தெரு, சுபாஷ் நகரம், குரோம் பேட்டை, சென்னை-44 என்பதாம்.

-(அம்பை)

கும்பகோணம் பெரிய மடத்தில்

மகாமக விழா.

குடந்தை ஸ்ரீ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள் பெரிய மடத்தில் மகாமக விழா 1968 பிப்ரவரி 12, 13, 14, 15-ஆகிய நான்கு நாட்களிலும் சிறப்பாக நடைபெற்றது. முதல்நாள் சமயப் பிரச்சார விழாவை மடத்தின் தலைவர் ஜகத்குரு ஸ்ரீ சாந்ததேவ ஸ்ரீ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள் தொடங்கிவைத்தார்கள். குடந்தை நகரமன்றத்தலைவர் திரு. என். காசிராமன் தலைமை வகித்தார். மகாமகச் சிறப்பைப்பற்றி கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திரு அடிகளாசிரியர் அவர்களும், 'சமய வாழ்வு' என்ற தலைப்பில் குடந்தை திரு. எஸ். சுந்தரேசன் செட்டியார் அவர்களும் மூர்க்க நாயனார் வரலாற்றை ஆடுதுறை திரு. க. வடிவேலனாரவர்களும் சொற்பொழிவாற்றினர்.

இரண்டாம் நாள் திருமுறை விழா கும்பகோணம் அபிமுக்தீஸ்வரர் ஆலயம் அறங்காவலர் திரு. எம். சி. எஸ். இரத்தினசபாபதி செட்டியார் துவக்கி வைக்கவும், பேரூர் ஆதினத் தலைவர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் தலைமை வகிக்கவும், பாண்டமங்கலம் புலவர் திரு. வரதராஜன் பொத்தனூர் புலவர் திரு. அ மணிவாசகம், திரு. கி வா. ஜகந்நாதன, வித்துவான் திரு. சுவர்ண காளீச்சுவான், சிரவணபுரம் கௌமாரமடம் தவத்திரு சுந்தரசுவாமிகள் அவர்களும் சொற்பெருக்காற்ற, பெரிய மடம் ஆலோசனைக்குழு அங்கத்தினர் திரு. ராம. சம்பந்த மூர்த்தி முதலியார் நன்றிகூறவும் இனிது நிறைவேறிற்று.

மகாமகத்தன்று ஸ்ரீ பசவேசரின் 800-வது ஆண்டு விழா, மடத்தின் செயலாளர். திரு. ஆர். திருநாவுக்கரசு அனைவரையும் வரவேற்க, பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் தலைமையேற்க, புலவர் திரு. சோமசுந்தர அய்யர், வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி ஆகிய இருவரும் கொங்கு பெங்களூர் பசவசமிதியார்

சார்பில் கன்னடத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட பசவேசர் பொன்மொழிகள் என்னும் நூலை திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் வெளியிட்டார்கள். மொழிபெயர்ப்பாளர் இருவர்க்கும் பெரிய மடத்துச் சுவாமிகள் பட்டாடை போர்த்தி ஆசி கூறினார்கள். சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முன்னாள் செயலாளரும் துணைத்தலைவருமாகிய கடலூர் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அன்புடன் கல்லில் பொறித்துதவிய, அருணகிரி நாதர் பாடிய பெரிய மடத்துத் திருப்புகழ்க் கல்வெட்டு பேரூர் இராமசாமி அடிகளால் திறந்து வைக்கப் பெற்றது.

நான்காம் நாள் கருத்தரங்கு நடைபெற்றது. சிக்கல் திரு. க. இராஜகோபால் பிள்ளை வரவேற்புரை கூற பெருமிலக்கிழார் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் கருத்தரங்கைத் துவக்கி வைக்க திரு. சி. இராமசாமி முதலியார் தலைமை வகித்தார்கள். திரு. மார்க்கண்டவேல்ராஜன் குடந்தை சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் திரு. பி. டி. எஸ். சிங்காரம் செட்டியார், சித்தாந்தம் ஆசிரியர் திரு. மு. அருணாசலம், திருச்சிராப்பள்ளி மாவட்ட சன்மார்க்க சங்கத்தலைவர் ஊரன் அடிகள், திரு. கோ. பெ. வையகம், தி. கி. நாராயணசாமி நாயுடு ஆகியோர் சமயச் சங்கங்களின் அவசியம் அமைப்பு, பணி ஆகியவை பற்றி கருத்துக்களையும் ஆலோசனைகளையும் விரிவாகக் கூறினர். மடத்துச் சுவாமிகள் ஆசியுரையுடன் கருத்தரங்கு நிறைவேறியது. எல்லா நாட்களிலும் பொதுமக்களுக்குச் சமயத்தினர் படக்காட்சி காட்டப்பட்டது.

இறை வழிபாடு

சென்ற திங்கள் 3—3—68 அன்று இலிங்கி செட்டித் தெரு மல்லிகேச்சுரர் ஆலயத்தில் திருமுறை வழிபாடு சிறப்புற நிகழ்ந்தது அடுத்த மாதம் 7—4—68 ஞாயிறன்று திருவேட்டீச்சுரர் திருக்கோயிலில் திருமுறை வழிபாடு நிகழும். தருமபுர ஆதீன ஓதுவார் திரு. P. சுவாமிநாதன், திருக்களர் தேவார ஓதுவார் திரு. சுந்தரேச தேசிகர் முதலியவர்கள் பங்கு கொள்வார்கள். அன்பர்கள் அனைவரும் வந்து கலந்து திருமுறைப் பெருமைகளையறிந்து படித்து நல்வாழ்வு பெறுவார்களாக.

அருள்திரு சோமசுந்தர நாயகர் அவர்கள் 67 ஆவது ஆண்டு குருபூசையும் அவர்களால் நிறுவப்பெற்ற வேதாகமோகத சைவ சித்தாந்த சபையின் 109 ஆம் ஆண்டு விழாவும் 2-3-68, 3-3-68 ஆகிய இரு நாட்களிலும் சூளை காசி விஸ்வநாதர் திருக்கோயிலிலும் சிதம்பரேசுவரர் திருக்கோயிலிலும் முறையே நிகழ்ந்தன. பண்டித வித்துவான் நடேச நாயகர், வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் எம். ஏ., பி. ஓ. எல். முதலிய பெரியோர்கள் திரு. நாயகர் அவர்களைப் பற்றியும் சைவ சமய மாண்பு பற்றியும் விரைவுரையாற்றினர்.

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாச உறுப்பினர்கள் தங்கள் சந்தாத் தொகை ரூபாய் ஐந்தினையும் 31-12-67 க்குள் அனுப்பியிருக்க வேண்டும். அவ்வாறு அனுப்பாதவர்கள் இப்போதாவது தாமதிக்காது அனுப்பிவைத்தல் நலம். வி. பி. பி.யில் சித்தாந்த இதழை அனுப்புவதாயின் 75 காசுகள் வீணாக அதிகம் செலுத்தவேண்டியிருக்கும். மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப் பெயர், 2. சந்தா எண், 3. தெளிவான முகவரி, 4. மாவட்டம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும். புது முகவரியாயின் அதனைக் குறிப்பிடல் நன்று.

ஈழ நாட்டில் பல பேரன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையினை அனுப்பிவைக்கவில்லை. அரசியலார் இசைவு பெற்று உடனே அவர்கள் அத்தொகையினை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை "திரு. சுந்தரம், செயலாளர், மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம், 163, ஜலன்பந்தர், குலாலம்பூர்" என்ற முகவரிக்குச் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர்,
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழ மாடவீதி, சென்னை-4,

அநுபந்தம் - சித்தாந்தம் - மார்ச், 1968

உ

சிவமயம்

சைவ சித்தாந்த மகா சமாஜ

62-ஆம் ஆண்டு நிறைவு விழா

திருவெண்காடு

சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமைப் பேருரை

பேராசிரியர் திரு. கு. ஆளுடைய பிள்ளை
B.COM. (HONS.), M.COM. M.E.S.
(முதல்வர், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, சென்னை-6.)

31—12—1967

பேருரை

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண். (உமாபதி சிவாசாரியர்)

சைவ நெறி தழைத்தோங்க விழையும் தாய்மார்களே !
பெரியோர்களே ! தோழர்களே !

வணக்கம், சைவ சித்தாந்தத்தின் சாறாகிய சிவஞான போதத்தை அருளிச் செய்த மெய்கண்ட தேவர் அவதரிக்க அருள் செய்த திருவெண்காட்டு இறைவன் முன்னிலையில், சைவ சித்தாந்த மகா சமாசத்தின் 62-ஆம் ஆண்டு விழாவின் ஒரு பகுதியாய இளைஞர் மகாநாட்டிற்கு என்னைத் தலைமை யேற்க அழைத்த சைவ சிந்தாந்த மகா சமாசத்தினர்க்கும், வரவேற்புக் குழுவினர்க்கும் எனது நன்றியும், வணக்கமும் உரித்தாகும். ஆண்டு விழாக்களில் இளைஞர் மாநாடு என்றொரு பகுதியை ஏற்படுத்தி, சைவ நெறியில் இளைஞர்களை ஈர்க்க வகை செய்திருப்பது பெரிதும் போற்றத்தக்கது, பாராட்டத்தக்கது. இளைஞர் மாநாட்டில் இளைஞரையே தலைமை யேற்கச் செயவது, சொற்பொழிவாற்றச் செய்வது என்பதும் சமாசத்தின் விருப்பம் போலும். இஃதும் வர வேற்கத்தக்கது. ஏனெனில், அறிவு, ஆற்றல், ஆன்மீக உணர்வு மிக்க ஆன்றோர்கள் ஒருபாலும், சமயப்பற்றற்ற இளைஞர் ஒருபாலும் தனித்தனியே இயங்கிவரின் ஒரு தலை முறைக்குப் பின் ஆன்மீகத் துறையின் வளம் அழிந்தொழிந்து போகாவிடினும் பெரிதுங் குன்றிவிடக் கூடும். ஆனால் சமாசத் தினர் முன்னுணர்வால் இந்நிலை ஏற்படாமல் பாதுகாக்கப் பட்டு வருகிறது. அறுபத்திரண்டு ஆண்டுகட்கு முன்பு என் பாட்டனார்—ஆசிரியர் மறைமலை அடிகள் அவர்கள் மற்றும் பல பெரியோர்கள் துணை கொண்டு தவத்திரு ஞானியார் அடிகள் திருமுன்னிலையில் இச் சமாசத்தைத் தோற்றுவித்தது யாவரும் அறிந்த செய்தியே. அவ் வழிவந்த காரணங் கொண்டோ அல்லது என்னில் சைவ உணர்வு கண்ட சமாசப் பெரியோர் விழைந்த காரணங் கொண்டோ நான் இங் குற்றேன்.

இளைஞர்கள் சைவ உணர்வுற்றவர்களாயிருப் பின் மட்டுமே சைவம் வளரும். சிறு வயது முதல் அன்ருட வாழ்க்கை நிகழ்ச்சிகளில் சைவப் பாங்கு கடைப் பிடிக்கப்பட வேண்டும். இதில் பெற்ருேர்கள் கடமை மிகப் பெரிய தொன்ருகும். என் பெற்ருேர்கள் என்னை வளர்த்த முறையை அடிக்கடி எண்ணுவதுண்டு. சைவ சின்னங்கள் அணிவதும், திருநீறு பூசுவதும், இறைவழிபாடு இயற்றுவதும், தேவார திருவாசகங்களை இசையுடன் ஓதுவதும், திருத்தலங்களுக்குச் சென்று வழிபடுவதும், சைவ வினுவிடை படித்துச் சைவநெறி கடைப்பிடிப்பதும் எளிதாகச் செய்யக்கூடியன. தன்னம்பிக் கையுடனும், இறையுணர்வுடனும், மன நிறைவுடனும் வாழ மேற்கூறிய சூழ்நிலையில் வளருதல் இன்றியமையாதது. இச் சூழ்நிலையை உருவாக்கித் தரும் பொறுப்பு பெற்ருேர்களுக்கு உண்டு. இன்றைய இளைஞரே நாளைய பெரியோர் என்பது யாவருமறிந்த உண்மை. நாளை சைவவொழுக்கம் மெருகு பெற்று ஒளிவீசித் திகழவேண்டுமெனில் இன்றைய இளைஞரி டையே அது பரப்பப் படல் வேண்டும். இதன் பொருட்டுத் தான் சமாசம் இளைஞர் மாநாட்டை ஆண்டுவிழாவின் இன்றி யமையா உறுப்பாகக் கொண்டுள்ளது என்று கருதுகின்றேன்.

கடந்த இரண்டு நாட்களாக சைவப் பெருமக்களனை வரும் அரும்பெரும் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பெரும் பயனடைந்திருக்கின்றீர்கள். சைவம் என்பது யாது? சைவ சமய நூல்கள் யாவை? சைவ சமயக் கொள்கை எத்தகை யது என்பனபற்றி விரிவாகவும் விளக்கமாகவும் ஆன்ருேர் பலர் பேசியுள்ளனர். நான் பேச முற்படுவது இளைஞரின் சைவ சிந்தனையைத் தூண்டும் சில செய்திகள் மட்டுமேயாம்.

ஆயினும், சிவஞான சித்திச் செய்யுட்களில் இரண்டை மட்டும் இங்கே கூற ஆசைப்படுகிறேன்.

“ வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது, சால உயர்சிவ ஞானத்தாலே
போழிள மதியி னானைப் போற்றுவார் அருள்பெற்ருரே.”

—சித்தியார் - 181

இச் செய்யுளிற் கூறியபடி நாமெல்லாம் சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெற்றுள்ளோம். உயர் சிவஞானத்தால் பிறைமதிக் கண்ணியானைப் போற்ற முற்பட்டுள்ளோம். ஆதலால், சிவனருளைப் பெற்றே தீருவோம் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. காரணம் காரியத்தைப் பயந்தே விடுமன்றோ?

சிலர் சித்தாந்த சாத்திரங்களைப் படிக்காமல் அதில் என்ன கூறப் பெற்றிருக்கிறதென்று வினவுவார்கள் சிலர் நாத்திகம் பேசிக் கொண்டு திரிவார்கள். இத்தகையோர் மயக்க உணர்வு கண்டு வருந்திக் கூறுவார்போல் அருணந்தி சிவாசாரியார்,

"சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
சென்னமொன்றி லேசீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகரெலாம் மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இதுவென்ன பிராந்தி"

—சித்தியார் - 268

என்னும் செய்யுளை, சைவநெறி என்னுந் தலைப்பின் கீழ்க் கூறியுள்ளார். இப் பாடலால் அறிவுறுத்தியபடி சீவன் முத்தராக விளங்கியவர்கள் மாணிக்கவாசக சுவாமிகள் என்பதனை அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகப் பாக்களால் தெளிவாக உணரலாம். ஏனைய சமயாசாரியர்களும் அவரவர் பக்குவநிலைக் கேற்பச் சிவனருள் பெற்றவர்களென்பதனை அவர்கள் வரலாற்றாலும், அவர்களருளிய திருமுறைகளாலும் உணரத்தகும், இந்நிலையை அடைய முயல்வதே நம் சைவ சித்தாந்த சமாசத்தின் குறிக்கோளாகும். நிற்க.

நாம் எதையும் ஒப்புக் கொள்ளுமுன் அதனை நம்ப வேண்டும். அதை நம்புவதென்றால் அது உண்மையானதாக

இருக்கவேண்டும். உண்மையானது எது? உண்மைக்கு இலக்கணம் என்ன? உண்மை காலங்கடந்து நிற்பது, உண்மை என்றும் நிலைத்திருப்பது. உண்மை உலகு ஒப்பும் தன்மையது. இத்தன்மைகள் அனைத்தும் சைவத்திற்குண்டு. சைவத்தின் தொன்மையை எளிதிற்கூற இயலுமோ? இவ்வுலகு தோன்றிய காலந்தொட்டுச் சிவ வழிபாடும் சிவசிந்தனையும் இருந்து வருகின்றன. எத்தனையோ மதங்களும், சமயங்களும் தோன்றி அழிந்துபட்டன; நாகரிகங்கள் தோன்றி மறைந்தன; ஆனால் சைவ சமயம் தோன்றி வளர்ந்து கொண்டு வந்தது - வருகிறது; அன்றி அழியவோ மறையவோ இல்லை. சுருங்கக் கூறில் சைவம் நிலைத்துள்ளது. உலகிலுள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த, பல்வேறு மொழிகளைக் கொண்ட, பல்வேறு வாழ்க்கை வழிகளைக் கொண்ட அறிஞர்களும் சைவ சமயம் சிறப்பு மிக்க, தொன்மையான, சீரான, நற்சமயம் என ஒப்பியுள்ளனர்.

மேற்கூறியவாறு சைவ சமயம் உண்மையான சமயம் என்று பலரும் ஒப்பக் காரணம் அது அன்பு, அறம், அருள் என்ற அடிப்படைக் கோட்பாடுகளின் மீது அமைந்திருப்பதே. எக் காலத்தவரும், எந் நாட்டவரும், எம் மொழியினரும் ஏற்கும் கோட்பாடுகள் இவை. இக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். சிக்கல்கள் தீர்ந்து சீர்மை பெருகவும், வெறுப்பொழிந்து விருப்பு வளரவும், துன்பமகன்று இன்பம் பரவவும், பூசல்கள் தவிர்த்து அமைதி நிலவவும் அன்புணர்வு தேவைப்படுகிறது. அருளுணர்வு அவ்வுலகத்தைப் பற்றிச் சிந்திப்போருக்கும், மனிதப் பண்பின்பாற் பட்டவருக்கும் இருத்தல் இயல்பு. அறநெறியில் நிற்பது அறிஞர் கடன். எனவே சைவ மக்களனைவரும் அறவழியில் நின்று அருளுணர்வு கொண்டு அன்பு வாழ்க்கை நடாத்தல் வேண்டும். இம் முறையில் வாழ்க்கை நடத்துவோர் கடைப்பிடிக்க வேண்டிய சில விரதங்களும் உண்டு. அவற்றில் சில இன்சொல் பேசுதல், பயனில சொல்லாது விடுத்தல், இழித்துரைத் தலைத் தவிர்த்தல் போன்றனவாம். இளமை முதற்கொண்டே இந் நெறிகளைக் கடைப்

பிடிப்பின் வாழ்க்கை வளம்பெறும். சைவநெறி தழைத் தோங்க நல்லதோர் சூழ்நிலை உருவாகும்.

சைவப் பெருமக்களே !

உலகெங்கணும் இன்று பெரியதொரு புரட்சி உருவாகி வருகிறது. அப் புரட்சி அமைதியை அடிப்படையாகக் கொண்டது. உலக நாடுகள் அவையில் 123 நாடுகள் அமைதியுடன் வாழ வழிவகைகளை இடைவிடாது ஆய்ந்து வருகின்றன. அது மட்டுமன்று. தம்முள் கல்வி, கலைப்பண்பு, அறிவியல் முதலிய துறைகளில் ஒற்றுமை கண்டு மேன்மை பெற, தக்க குழுக்களமைத்து பன்மையில் ஒருமை காண விழைகின்றன. இக்குழுக்கள் ஆன்மீகத் துறையிலும் அக்கறை காட்டுகின்றன. இந்நிலையில் பாரெங்கும் மறுமலர்ச்சி தோன்றுவது காணக் கிடக்கும் உண்மையாம். இந்த ஆன்மீக மறுமலர்ச்சி எல்லா நாடுகளிலும் காணப் படுகின்றது எனினும் வளம் மிக்க நாடுகளில் மிகுதியாகவே காணப்படுவதை நேரில் காணும் வாய்ப்பை நான் பெற்றேன். குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, மேற்கு செர்மனி நாடுகளில் ஆன்மீக விசாரணை மிகுந்திருப்பதைக் கண்டேன். வாழ்க்கை வசதிகளில் பெரும்பாலானவற்றைப் பெருமளவு பெரும்பாலோர் பெற்றுள்ள அந்நாடுகளில் ஆன்மீக உணர்வு தலைதூக்கக் காரணம் யாது? வாழ்க்கை யின் குறிக்கோள் அல்லது இலக்குத்தான் என்ன? நான் யார்? என் உள்ளம் யார்? என்னை யாரறிவார்? என்ற கேள்விகள் இவ்வுணர்வைத் தூண்டியுள்ளன. இயந்திரயுகமாய 20ஆம் நூற்றுண்டில் ஓய்வு நிரம்பக் கிடைக்கும் வாய்ப்புப் பெற்ற மேலை நாட்டினர் மனம் இத்துறையில் தோய்ந்து இருப்பது நல்லதொரு திருப்பமே. ஆம்! எத்தனை நாட்கள் தான்— ஆண்டுகள் தான் புறக்கவர்ச்சி மனிதனை ஈர்த்திருக்க முடியும். அகநிறைவும், மன அமைதியும் அஃது அளிக்க வல்லதன்றே. அமைதியைத் தேட அறிவியல் வகைசெய்யுமா என்று காண முயற்சி செய்த அறிவியலறிஞர்களும் தோல்வியே கண்டனர். ஆக்க சக்திக்குப் பயன்பட்ட அறிவியல் இன்று அழிவிற்குப்

பயன்படுத்தக்கூடிய பயங்கர நிலையில் பரந்து வளருகிறது. இஃதும் மனிதனுக்கு ஒரு படிப்பினையாம். மனிதன், "இயற்கையை வென்றுவிட்டேன்" என்று இறுமாந்து மார்தட்டிப் பேசும் மேடையில் திடுமென நிலவதிர்ச்சியும், எரிமலைக் குழம்பும், புயற்காற்றும் தோன்றி ஆணவத்தை அடக்கி "மனிதா! உனக்கு அப்பாற்பட்டதொரு சக்தி உள்ளதென்பதனை அறியாயோ!" என்று எள்ளி நகையாடும் வகையான் நிகழ்வதைக் கண்டு தன் தோல்வியை ஒப்புக்கொள்ளும் நிலையைக் காண்கிறோம். இங்கிலாந்தைச் சேர்ந்த பீட்டில்கள் எனப்படும் பாடகர் குழு புகழ் ஏணியின் உச்சியில் இருக்குங்கால், திடுமென இந்திய யோகி ஒருவருடைய ஆன்மீக ஈடுபாட்டைக் கண்ணுற்றுத் தாமும் யோகத்தில் ஈடுபட்டுள்ளனர். மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த பெருந் தொழிலதிபர்களும் நம்நாட்டுத் தத்துவம், யோகம் முதலியவற்றில் ஈடுபட்டுள்ளனர் என்ற செய்திகளைப் படிக்கிறோம். இச்சூழ்நிலை சைவ சமயத்திற்குப் பெரிதும் ஆக்கந்தருவதாகும். உலகெங்கும் சைவ உணவு இயக்கம் வலுப்பெற்று வருவதையும் காண்கிறோம். நம் நாட்டிலும் தமிழுக்கு நல்ல காலம் ஏற்பட்டுள்ளது. சைவமும் தமிழும் சிவனும் சக்தியும் போன்றனவன்றோ? இன்றைய சூழ்நிலையே ஒரு பெரும் வாய்ப்பாகும். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு சமாசம், தற்போது செய்துவரும் அரிய பெரிய தொண்டுகளை வலுப்படுத்துவதோடன்றி, மேலும் பல பணிகளை மேற்கொள்ளலாம். மற்றும் இங்கு குழுமியுள்ள சிவநேயச் செல்வர்களும் தம்மாலியன்ற வரையில் சில சிவத்தொண்டுகளில் தம்மை ஈடுபடுத்தி சைவ வளர்ச்சிக்கு உதவ வேண்டும். நாம் இப்பணிகளில் இன்று முதல் ஈடுபடுவோமாயின் இருபதாம் நூற்றாண்டின் திருப்பம் சைவத்தின் பொற்காலம் எனத்திகழும் என்பதில் ஐயமுண்டோ? காலச் சகட்டில் ஆக்கமும் தேக்கமும் காண்பது இயல்பே. பேராக்கம் பெற்றுப் பேரொளி வீசித்திகழ்ந்த சைவ சமயம் கடந்த சில நூற்றாண்டுகளாகத் தேக்கமுற்றுள்ளது. அதற்கு மீண்டும் ஆக்கந்தந்து சிறக்கச் செய்வது நம் கடன். அதுபற்றிச் சில கூறுவது என் கடமையாகும்.

அன்றாட வாழ்க்கையில் சைவ நெறிகளைக் கடைப் பிடிப்பது மிக இன்றியமையாதது வீடுகளில் நாடோறும் வழிபாடு செய்ய வேண்டும். வழிபாட்டின்போது தேவார திருவாசகங்களைத் தெளிவாகப் பாடி இறைவனைப் பராவ வேண்டும். அச்சமயம் வீட்டிலுள்ள இளஞ்சிறார்களைக் கூட்டி வழிபாட்டு முறையினைக் கவனிக்கவும், தேவார திருவாசகங் களைப் பாடும் முறையினைக் கவனிக்கவும் செய்யவேண்டும். குழந்தைகள் எளிதில் பாடக்கூடிய தேவார, திருவாசக, திருவருட்பா பாடல்களைக் கற்றுத்தந்து அவர்களை வழிபாட்டின் போது பாடச் செய்யவேண்டும். பிள்ளைகள் இரவில் தூங்கு முன் கதைகேட்கும் விருப்புடையவர்கள். நாயன்மார்கள் சரித்திரங்களையும். திருவிளையாடற் புராணத்தில் காணக் கிடக்கும் நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறி இறையுணர்வை வளர்க்கவேண்டும். சைவ வினாவிடை பயிற்றுவிப்பதன் வழி சைவ சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களைப் பசுமரத்தாணி போற் பதியவைத்தல் வேண்டும். திருக்கோயில்களுக்குச் செல்லுங்கால் குழந்தைகளையும் அழைத்துச் சென்று வழி பாட்டு முறையையும் விளக்கவேண்டும். தம் வருமானத்தில் ஒரு சிறுபகுதியையேனும் சிவத் தொண்டிற்கு ஒதுக்க வேண்டும். இத்தொகையைச் சைவ நற்றொண்டிற்குப் பயன் படுத்த வேண்டும் அல்லது அவ்வகைத் தொண்டில் ஈடுபடும் சங்கங்களுக்கு அளிக்கவேண்டும்.

வாழ்க்கை வசதி பெற்றவர்கள் கிராமபோன் பெட்டியில் பன்னிரு திருமுறைத் தட்டுக்களை நாடோறும் இயக்கி குடும்பத்தினாளைவரும் அதைக் கேட்டு இசையுடன் பாடிப் பழகி மகிழலாம். வானொலியில் அவ்வப்போது ஏற்பாடாகும் சமயச் சொற்பொழிவுகளையும், இசை நிகழ்ச்சிகளையும் வீட்டி லுள்ளோரனைவரும் கேட்கவேண்டும்.

இதுகாறும் குடும்ப அளவில் சைவ வாழ்வு வாழும் வகையினைக் காண்போம். இனி மக்களிடையே சைவ சமயம் பரவ என்ன செய்யவேண்டும் என்று நோக்குவோம். மனித னின் இன்றியமையா அடிப்படைத் தேவைகள் உணவு, உடை,

வீடு என்பனவாம். இவற்றிற்குப் பின் தேவைப்படுவன கல்வி, மருத்துவ வசதிகளாம். பிற சமயங்கள் தற்காலத்தில் வளரும் வகையினை நோக்குங்கால், மேற்கண்ட தேவைகளை ஓரளவுக்கு நிறைவு செய்து மக்களைத் தத்தம் சமயத்திற்கு ஈர்ப்பது புலப் படும். பசியால் வாடும் மனிதனிடம் இறைவனைப் பற்றிப் பேசுதல் பயனளிக்காது. எனவே வறுமையில் உழலும் மக்களுக்குத் தொண்டு செய்து அவர்கள் அன்பைப் பெற்று அவர்களைச் சைவ மக்களாக ஆக்க ஏற்பாடு செய்யவேண்டும். வட்டந்தோறும், ஊர்தோறும் சைவர் சபையொன்று ஏற்படுத்தி அதனை மையமாகக் கொண்டு பல தொண்டுகளைச் செய்ய லாம். சைவத் தொண்டிற்கு ஒதுக்கும் தொகையை அச் சபைக்கு அளித்து சபை சார்பில் வாரம் ஒருமுறையேனும் அடியார்க்கு உணவு அளித்து முடியுமானால் உடையும் அளித்து, சைவ சமயம் பற்றிய செய்திகளை எளிய முறையில் எடுத்து ரைக்க வேண்டும். வசதியுள்ள இடங்களில், சைவப் பேரறிஞர்களின் அரிய சொற்பொழிவுகளை நாடாப் பதிவு (Tape record) செய்து அவற்றை மீண்டும் மீண்டும் பலரும் கேட்டும் பயனுறும் வகையில் ஏற்பாடு செய்யலாம். மற்றும் நம் சமாசம் "சைவ சித்தாந்தக் குரல்" என்பது போன்ற தலைப்பில் அஞ்சல் வழி வினாவிடைப் பயிற்சி முறையில் சைவ சித்தாந்தக் கொள்கைகளைப் பரப்பலாம். பயிற்சியைச் செவ்வனே முடிப்போர்க்குச் சான்றிதழ் வழங்கவும் ஏற்பாடு செய்யலாம். தக்க சூழ்நிலை ஏற்படுமாயின் வானொலி நிகழ்ச்சி களில் ஓரிருதிங்களுக்கு நாடோறும் பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்கு சைவ சித்தாந்த பாடங்களை நடாத்தி மக்களை சைவ சமயத்தின்பால் ஈர்க்கலாம். சைவ சித்தாந்த உண்மை களை நன்கு எடுத்துக் கூறக்கூடிய, தமிழில் மட்டுமின்றி பிற மொழிகளில், நல்ல புலமையுள்ள அறிஞர் பெருமக்களை மேலை நாடுகளுக்கனுப்பி நம் சமயத்தைப் பரப்ப முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

பட்டமளிப்பு விழா போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் சமயக் கருத்துக்கள் கொண்ட புத்தகங்களை இளம்பட்டதாரி களுக்கு இலவசமாக வழங்கலாம். சைவர் தம் இல்லங்களில்

பன்னிரு திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும், சிறந்த புராணங்களையும் வாங்கிவைத்துப் படித்துப் பயனடைதல் வேண்டும். சமயத் தொடர்புற்ற படங்கள் பல திரையிடப் பட்டு வருவதை நாம் அறிவோம். சமாசத்தில் செல்வாக்குள்ள பெரியோர் அப்படங்களைத் தயாரிப்பவர்களோடு தொடர்பு கொண்டு படங்களின் தரத்தை உயர்த்தவும், சித்தரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் வரலாற்றுப் பொருத்தத்தைச் சீர்தூக்கிப் பார்த்து அறிவுரை கூறவும் முயற்சிகள் மேற்கொள்ளலாம். திரைப்படம் பொதுமக்களைப் பெரிதும் கவரும் சாதனமாக அமைந்து விட்டபடியால், நாம் அது மக்கள் பண்பைப் பாதிக்க வல்லது என்ற உண்மையைக் காண மறுப்பது நன்றன்று. அச்சாதனத்தை நன்முறையில் பயன்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, வீட்டில் எந்நேரமும் இறைவன் திருப்பெயர் ஒலிக்க, குழந்தைகள் பெயர்களைச் சைவ. தமிழ் நற்பெயர்களாகவே வைத்தல் நம் கடன். அங்ஙனம் வைத்த பெயர்களைச் சுருக்கிப் பொருளழிந்து போகும் வகையில் கூப்பிடலாகாது. இறைவன் திருப்பெயரை முழுதாக ஒலிக்க ஒலிக்க இனிமை பெருகும்.

மூன்று மூர்த்திகளும், மூன்று தீர்த்தங்களும், மூன்று தலவிருட்சங்களும் கொண்ட இப்பழம் பெரும் பதியைச் சைவ சமய குரவர் மூவர் பாடியிருத்தலை அனைவரும் அறிவர். இன்றைய மாலை நிகழ்ச்சியிலும் மூவர் பேச்சு அமைந்துள்ளது. அப்பர் அருளிய "எரிவீசி யிரவாடும் இறைவர் மேய வெண்காடே வெண்காடே என்பீராகில் வீடாத வல்வினை நோய் வீட்டலாமே" என்னும் தாண்டக அடிகளைக் கூறி இத்துடன் முதற்பேச்சை முடித்தமருகின்றேன். வணக்கம்.

வாழ்க சைவம் ! வளர்க சமாசம் !!